விலை: 50.00
பக்கங்கள் : 16
website : www.valampurii.lk
viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 25
ஒலி 078 வள்ளுவர் ஆண்டு 2055 மாசி 23 புதன்கிழமை (06.03.2024) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829




## இணைய வழி பாதுகாப்புச் சட்டம்
# கருத்துச் சுதந்திரத்தில் தாக்கத்தை ஏற்படுத்தும்
## ஐ.நா அதிருப்தி




(ஜெனிவா)

இணையவழி பாதுகாப்புச் சட்டம் நாட்டில் கருத்துச் சுதந்திரத்தில் பாரிய தாக்கத்தை ஏற்படுத்தும் என ஐக்கிய நாடுகள் சபைக்கான துணை நிரந்தரப் பிரதிநிதி ரீட்டா பிரெஞ்ச் அதிருப்தி வெளியிட்டுள்ளார். (04ஆம் பக்கம் பார்க்க)

## அதிக சளி 4 மாத ஆண் குழந்தை மரணம்

(கரணவாய்)

அதிக சளி காரணமாக வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த நான்கு மாத ஆண் குழந்தை ஒன்று சிகிச்சை பல 15

## நாவற்குழியில் கைக்குண்டு

(சாவகச்சேரி)

நாவற்குழி சிவபூமி காணியில் இருந்து நேற்று செவ்வாய்க்கிழமை பிற்பகல் கைக்குண்டு ஒன்று இனங்காணப்பட்டுள்ளது.

மேற்படி காணியில் புதிய கட்டடம் அமைப்பதற்கான அத்திபாரம் வெட்டிய போதே கைக்குண்டு 15

## டிப்பர் மோதியதில் அருட்தந்தை மரணம்
### மன்னார் அடம்பனில் சம்பவம்




(மன்னார்)

டிப்பர் மோதியதில் மன்னார் மறை மாவட்டத்தைச் சேர்ந்த அருட்தந்தை ஒருவர் உயிரிழந்துள்ளார்.

மன்னார் அடம்பன் பொலிஸ் 15

## காங்கேசன்துறை - நாகப்பட்டினம் கப்பல் சேவையை ஆரம்பிக்க நடவடிக்கை
### இந்திய உயர்ஸ்தானிகர் சந்தோஷ் ஜா



(கொழும்பு)

காங்கேசன்துறைக்கும் - நாகப்பட்டினத்துக்கும் இடையிலான பயணிகள் கப்பல் சேவையை மீண்டும் ஆரம்பிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என இந்திய உயர்ஸ்தானிகர் சந்தோஷ் ஜா தெரிவித்துள்ளார்.

இலங்கை பத்திரிகை கழகம் கொழும்பு ஹில்டன் ஹோட்டலில் 15

## வடக்கில் படையினர் வசமுள்ள காணிகளை விடுவிக்க நடவடிக்கை
### பாதுகாப்புச் செயலாளர் ஆளுநரிடம் உறுதி



(யாழ்ப்பாணம்)

வடக்கில் படையினர் வசமுள்ள காணிகளை விடுவிக்க நடவடிக்கை எடுக்கப்படும் என பாதுகாப்புச் செயலாளர் ஜெனரல் கமால் குணரத்ன வட மாகாண ஆளுநர் பி.எஸ்.எம்.சார்ள்ஸிடம் உறுதியளித்துள்ளார்.

பாதுகாப்புச் செயலாளர் ஜெனரல்கமால் குணரத்னவை, வடக்கு மாகாண ஆளுநர் பி.எஸ்.எம்.சார்ள்ஸ் நேற்று சந்தித்து 15

## யாழ்.இந்தியத் துணைத் தூதுவர் நல்லை ஆதீன குருமுதல்வரை சந்தித்து ஆசி பெற்றார்



15

## உணவுப் பொருட்களின் விலைகள் குறைக்கப்படும்
### சிற்றுண்டி, உணவக உரிமையாளர் சங்கம்

(கொழும்பு)

மின்சார கட்டணம் குறைக்கப்பட்டமை காரணமாக, நள்ளிரவு முதல் உணவுப் பொருட்களின் விலையினை குறைப்பதற்கு தீர்மானித்துள்ளதாக, இலங்கை சிற்றுண்டிச்சாலை மற்றும் உணவக உரிமையாளர் சங்கம் அறிவித்துள்ளது.

இதற்கமைய, ஒரு கோப்பை தேநீர் ஐந்து ரூபாயினாலும் ஒரு கோப்பை பால் தேநீர் 10 ரூபாயினாலும் சிற்றுண்டிகள் 10 ரூபாயினாலும் குறைக்கப்படவுள் 15

## அழுகிய நிலையில் ஓமந்தையில் முதியவரின் சடலம் மீட்பு

(வவுனியா)

வவுனியா, ஓமந்தை, நாவற்குளம்பகுதியில் அமைந்துள்ள நீர்நிலையில் இருந்து முதியவர் ஒருவரின் சடலம் அழுகிய நிலையில் நேற்று மீட்கப்பட்டதாக ஓமந் 15

## வெளிநாட்டு மோகத்தால் தமிழர்கள் அதிகம் பாதிப்பு
### சபையில் அமைச்சர் அலி சப்ரி

(கொழும்பு)

வெளிநாட்டு மோகத்தால் வடக்கு, கிழக்கைச் சேர்ந்த தமிழர்கள் அதிகம் பாதிப்படைந்துள்ளதாக வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி தெரிவித்துள்ளார்.

திறந்த விசா ஊடாக வெளிநாடு செல்பவர்கள் தொழில் இடைத்தரகர்களினால் இவ்வாறு பாதிக்கப்பட்டுள்ளனர் என்றும் சுட்டிக்காட்டியுள்ளார்.

பாராளுமன்றத்தில் நேற்று இடம்பெற்ற அமர்வின்போது மியன்மார் சைபர் கிரைம் பயங்கரவாத 04



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 1ஆம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்
18 - 03 - 1946

மறைவு
16 - 02 - 2023

அமரர்
## ஐயாத்துரை நடராசா

கண்முன்னே வாழ்ந்த காலம்
கனவாகி போனாலும்
எம் முன்னே உங்கள் முகம்
எந் நாளும் உயிர் வாழும்
ஆண்டுகள் ஒன்றென்ன
ஆயிரம் கடந்தாலும்
உங்கள் அன்பு முகம்
எங்கள் மனங்களில் என்றும் நீங்காது
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

மீசாலை மேற்கு,
மீசாலை.

(19372)

தகவல்
குடும்பத்தினர்


இழந்த சக்தியை மீண்டும் பெற்றிட பாவியுங்கள்
றோயல் குளுக்கோஸ்




உற்சாகம்
புத்துணர்ச்சி
ஆரோக்கியம்

(C-8449)

சந்தைப்படுத்துவோர்:
சிவா நறுமணப் பூங்கா®
இல.288, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
(குறிப்பு : சத்திரத்துச் சந்திக்கு அருகாமையில்)
தொ.பேசி : 021 222 2567

Packed By:
ROYAL INDUSTRIES®
COLOMBO - 12
076 668 8025



வலம்புரி விளம்பரத் தொடர்புகளுக்கு
076 636 3378 | 076 097 3127


## புளியம்பொக்கணை நாகதம்பிரான் ஆலய பரிபாலன சபை

### வர்த்தக நிலையங்களுக்கான ஏலம் விடுதல்


கரைச்சி புளியம்பொக்கணை நாகதம்பிரான் ஆலயத்தின் வருடாந்த பொங்கல் உற்சவம் எதிர்வரும் 24.03.2024 ஆம் திகதி நடைபெறவுள்ளது. பொங்கல் உற்சவ காலங்களில் வியாபாரம் செய்கின்ற வர்த்தகர்களுக்கான “கடை ஏலம் விடுதல்” எதிர்வரும் 10.03.2024 ஆம் திகதி மு.ப 10.00 மணிக்கு ஆலய முன்றலில் இடம்பெறும் என்பதை வியாபாரம் செய்ய ஆர்வமுள்ள வர்த்தகர்களுக்கு அறியத் தருகின்றோம்.

குறிப்பு:
- ஏலத்தின்போது முழுத்தொகையும் செலுத்தப்படல் வேண்டும்.
- பொலித்தீன் தடைசெய்யப்பட்டுள்ளது.

(C-8473)

ஆலய பரிபாலன சபை
கரைச்சி புளியம்பொக்கணை நாகதம்பிரான் ஆலயம்.

# மரண அறிவித்தல்



## தில்லையம்பலம் கந்தையா கதிரேசு
### (கதிரேசு மாஸ்ரர்)

( தில்லையம்பலம் கந்தையா ஸ்ரோர்ஸ் - TKT உரிமையாளர்,
முன்னாள் உப அதிபர் - யா/ஆனைக்கோட்டை பாலசுப்பிரமணிய வித்தியாசாலை,
முன்னாள் முகாமையாளர் - ஆனைக்கோட்டை மூத்த நயினார் கோயில் )

அன்னை மடியில்
19.10.1934

முருகன் அடியில்
05.03.2024

சோமசுந்தரம் வீதி ஆனைக்கோட்டையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட தில்லையம்பலம் கந்தையா கதிரேசு அவர்கள் நேற்று (05.03.2024) செவ்வாய்க்கிழமை முருகனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா - அம்மணி தம்பதியரின் கனிஷ்ட புதல்வனும் காலஞ்சென்றவர்களான சண்முகநாதன், நாகம்மா, தம்பிப்பிள்ளை ஆகியோரின் அன்புச் சகோதரனும் காலஞ்சென்றவர்களான அன்னலக்சுமி, சுப்பிரமணியம், நல்லம்மா ஆகியோரின் அன்பு மைத்துனரும் காலஞ்சென்ற கணேசலிங்கம் மற்றும் கணேஸ்வரி, கமலாம்பிகை, காலஞ்சென்ற தில்லையம்பலம் மற்றும் கனகாம்பிகை ஆகியோரின் சிறிய தந்தையும் மகேஸ்வரி காலஞ்சென்ற இரவீந்திரநாதன் மற்றும் குணரத்தினம் காலஞ்சென்ற இன்பராணி மற்றும் பஞ்சலிங்கம் ஆகியோரின் அன்பு மாமனாரும் கிருஷ்ணவாணி, கணேஸ்வரன், மகேஸ்வரன், தர்மேஸ்வரன், கலைவாணி, தணிஸ்வரன், சுதர்சன், சுரேசன், சுதர்சினி, சிவரூபினி, சிவதாரணி, சிவராகினி, செல்லக்கணேஸ், செந்தூரன் செந்தாயினி, செயந்தினி றஜிதா, சாருகா, சானுஜன் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (06.03.2024) புதன்கிழமை பிற்பகல் 12.30 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று புகழுடல் தகனக் கிரியைக்காக கல்லுண்டாய் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

(19374)

தகவல்
குடும்பத்தினர்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடக்கில் சுகாதாரத்துறையிலுள்ள வெற்றிடங்கள் விரைவில் நிரப்பப்படும்

## வடக்கு ஆளுநரிடம் உறுதியளித்த சுகாதார அமைச்சர்

(கொழும்பு)

**வடக்கில் சுகாதாரத்துறையினர் எதிர்நோக்கும் பிரச்சினைகளுக்கு ஒரு சில மாதங்களுக்குள் தீர்வு பெற்றுத் தரப்படும் என சுகாதார அமைச்சர் ரமேஷ் பத்திரன வடக்கு மாகாண ஆளுநரிடம் உறுதியளித்துள்ளார்.**



சுகாதார அமைச்சர் ரமேஷ் பத்திரனவை வடக்கு மாகாண ஆளுநர் பி.எஸ்.எம். சார்ள்ஸ் கொழும்பு சுவசெரிபாயவில் அமைந்துள்ள சுகாதார அமைச்சில் நேற்று சந்தித்து கலந்து ரையாடிய போது அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

வடக்கு மாகாணத்தில் சுகாதார துறைக்கான ஆளணி பற்றாக்குறை காணப்படுவதால் சுகாதார துறையினர் எதிர்நோக்கியுள்ள சவால்கள் தொடர்பில் வடக்கு மாகாண ஆளுநரால், சுகாதார அமைச்சருக்கு எடுத்துக்கூறப்பட்டது.

வடக்கில் இதுவரை நிரப்பப்படாத ஆளணி மற்றும் ஆளணி வெற்றிடங்களுக்கான மாற்றீடுகள் தொடர்பில் எதிர்வரும் சில மாதங்களுக்குள் தீர்வு பெற்றுத் தரப்படும் என சுகாதார அமைச்சர் ரமேஷ் பத்திரன இந்த சந்திப்பின்போது உறுதியளித்தார்.

மத்திய சுகாதார அமைச்சின் செயலாளர் பி.ஜி. மஹிபாலவும் இந்த சந்திப்பில் கலந்து கொண்டிருந்தார்

(நி-5-6-33)

# தொல்பொருட்களைப் பாதுகாப்பதற்கு புதிய சட்டமூலம்-அமைச்சர் விதுர

(கொழும்பு)

நாட்டின் தொல்பொருட்கள் மற்றும் தொல்பொருள் பாரம்பரியங்களை பாதுகாப்பதற்கு புதிய சட்டமூலமொன்றை உருவாக்கவுள்ளதாக புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் விதுர விக்ரமநாயக்க தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி ஊடகப்பிரிவில் இடம்பெற்ற ஊடக சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்திருந்தார்.

இவ்விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

"எதிர்கால சந்ததியினருக்காக நாட்டின் தொல்லியல்சார் பாரம்பரியங்களை நாம் பாதுகாக்க வேண்டும்.

அதற்காக தொல்பொருள் திணைக்களத்துடன் இணைந்து புதிய சட்டமூலமொன்றை உருவாக்கவுள்ளோம்.

இந்த நாட்டின் தொல்பொருட்கள் மற்றும் தொல்பொருள் பாரம்பரியங்கள் கண்டறியப்பட வேண்டும். புதிய சட்டம் ஒன்றை உருவாக்கும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

அதில் சேர்க்கப்பட்டுள்ள சில விடயங்கள் தொடர்பில் அடிப்படை விதிகளைத் தயாரிக்கவும் நடவடிக்கை எடுத்து வருகிறோம்.

மேலும் 'பிக்கு கதிகாவத்' சட்டத்தைத் தயாரிக்கவும் எதிர்பார்த்துள்ளோம்.

அதற்கான முன்மொழிவுகளை மகாநாயக்க தேரர்களிடம் கோரியுள்ளோம்.

ஆனால் இந்த சட்டங்களை உருவாக்குவது எளிதான காரியம் அல்ல" என அமைச்சர் விதுர விக்ரமநாயக்க மேலும் குறிப்பிட்டுள்ளார். (நி-5-6)

# சாதாரண தரப் பரீட்சைக்கான பாடங்கள் 7 ஆக குறைக்கப்படும்-சுசில்

(கொழும்பு)

கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சைக் காக தற்போதுள்ள பாடங்களின் எண்ணிக்கை ஏழாக குறைக்கப்படும் என கல்வி அமைச்சர் கலாநிதி சுசில் பிரேமஜயந்த தெரிவித்துள்ளார்.

மீதமுள்ள மூன்று பாடங்களை உள்நாட்டில் மாண வர்களுக்கு வழங்கக்கூடிய தொழிற்றுறை மற்றும் சுற்றுச்சூழல் அறிவை அடிப்படையாகக் கொண்டு மதிப்பீடு செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என அமைச்சர் குறிப்பிட்டார்.

அவர்களின் விருப்பத்திற்கேற்ப திறமைகளை வெளிப்படுத்தும் பாடப்பிரிவுகளில் தொழில்சார் பயிற்சிகளைப் பெறுவதற்குத் தேவையான பின்னணி தயாரிக்கப்படும் என்றும் அமைச்சர் குறிப்பிட்டார். (நி-5-6)

# ஆசிய பசுபிக் சமாதான ஆராய்ச்சி சங்கத்தின் சர்வதேச மாநாடு வவுனியா பல்கலையில்

(வவுனியா)

ஆசிய பசுபிக் சமாதான ஆராய்ச்சி சங்கத்தின் 2024 ஆம் ஆண்டுக்கான சர்வதேச மாநாடு வவுனியா பல்கலைக் கழகத்தில் நாளை 7 ஆம் திகதி முதல் 10 ஆம் திகதி வரை நடைபெறும்.

சமாதானம் மற்றும் ஜன நாயகம் ஆகியவற்றை வலுப்படுத்துவதில் டிஜிட்டல் மாற்றம் மற்றும் செயற்கை நுண்ணறிவு என்ற தலைப்பில் இந்த மாநாடு இடம் பெறவுள்ளது.

அமெரிக்கா, ஜேர்மனி, ஜப் பான், கொங்கொங், இந்தியா, ஆர்ஜன்ரீனா, நியூசிலாந்து, நேபாளம், இந்தோனேசியா, துருக்கி ஆகிய நாடுகள் உட்பட 20 இற்கும் அதிகமான நாடுகளில் இருந்து இந்த மாநாட்டில் பேராசிரியர்கள் மற்றும் ஆய்வாளர்கள் கலந்து கொள்ளவுள்ளனர்.

இந்த மாநாட்டினை வவு னியா பல்கலைக்கழகம், ஆசிய பசுபிக் சமாதான ஆராய்ச்சி சங்கம் ஆகியவை பிரித்தானியா வின் கேட் நிலையத்துடன் இணைந்து நடத்துகின்றன.

நாளை 7 ஆம் திகதி ஆரம்பமாகும் இந்த மாநாட்டின் பிரதம விருந்தினராக சர்வதேச சமாதான ஆராய்ச்சி சங்கத்தின் செயலாளர் நாயகமும் அமெரிக்காவின் மசாசுசெட்ட்ஸ் பல் கலைக்கழக பேராசிரியருமான மட் மேயர் கலந்து கொள்ளவுள்ளார்.

இந்த மாநாட்டின் முக்கிய உரைகளை அமெரிக்காவின் கென்ட் பல்கலைக்கழகத்தை சேர்ந்த ஜப்பானிய பேராசிரியர் தற்சுஷி ஆராய், யாழ்.பல்க லைக்கழக வேந்தர் பேராசிரியர் சி. பத்மநாதன் மற்றும் தமிழ் நாடு உட்கட்டுமான நிதி முகா மைத்துவ தலைவரும் டான் சம் அமைப்பின் பணிப்பாளருமான பேராசிரியர் எம்.ஆறுமுகம் ஆகியோர் ஆற்றுகின்றனர்.

ஆய்வு கட்டுரைகள் சமர்பிக்கப்பட்டு விவாதிக்கப்படும் அதே வேளை சமாதானம் மற்றும் நல்லிணக்கம் தொடர்பில் மூன்று பயிற்சிப்பட்டறைகளும் 9 ஆம் திகதி அன்று தொழில் முயற்சிக்கான தனித்துவமான ஒரு சுற்றுச்சூழல் ஒன்றை இலங்கையில் ஏற்படுத்துவது தொடர்பிலான விசேட திட்ட அறிமுக கலந்துரையாடல் ஒன்றும் நடைபெறவுள்ளது.

ஒவ்வொரு இரண்டு வருடங்களுக்கு ஒருதடவை வெவ்வேறு நாடுகளில் நடைபெறும் இந்த சங்கத்தின் மாநாடானது முதன் முறையாக இலங்கையில் நடைபெறுவது குறிப்பிடத்தக்கது. (நி-5-6)





திரு.கந்தையா சுந்தரலிங்கம்
ஊதவி அதிபர் SLTS I
பயிற்றப்பட்ட விவசாய விஞ்ஞானம்

சேவை விபரம்

| | | |
|---|---|---|
| கிளி/முழங்காவில் மகா வித்தியாலயம் | - | 06.08.1988-01.01.1990 |
| ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை | - | 02.01.1990-31.12.1991 |
| கிளி/வேம்போடுகேணி சி.சி.த.க பாடசாலை | - | 01.01.1992-31.12.1992 |
| கிளி/பூநகரி மகா வித்தியாலயம் | - | 01.01.1993-31.12.1995 |
| கிளி/வேம்போடுகேணி சி.சி.த.க பாடசாலை | - | 01.01.1996-31.12.1996 |
| கிளி/முழங்காவில் மகா வித்தியலாயம் | - | 01.01.1997-01.01.2007 |
| கிளி/உமையாள்புரம் அ.த.க பாடசாலை | - | 02.01.2007-31.05.2009 |
| கிளி/வேம்போடுகேணி சி.சி.த.க பாடசாலை | - | 01.01.2010-10.10.2021 |

அர்ப்பணிப்பான கல்விச் சேவையில் 33 வருடங்களாக பணிபுரிந்து ஓய்வு பெற்றுள்ள எமது பாடசாலை உப அதிபர், சகல செல்வங்களும் பெற்று சீரும் சிறப்புடன் வாழ இறைவனை வேண்டி வாழ்த்துகின்றோம்.

(c-8470)

வாழ்த்துவோர்: பாடசாலை நலன்புரிச் சங்கம்
கிளி/வேம்போடுகேணி சி.சி.த.க பாடசாலை.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிறஸ் கொப்பர்ஸ் அணியை வீழ்த்தி இறுதிப் போட்டிக்கு தெரிவான யாழ்.ஜொனியன்ஸ்



சிறந்த வீரராக அஜித்

விக்ரம்-ராஜன்-கங்கு வெற்றிக் கிண்ண தொடரின் பிளெஒவ் தகுதி சுற்று 1 இல் கிறஸ்கொப்பர்ஸ் அணி, யாழ்.ஜொனியன்ஸ் அணியை 45 ஓட்டங்களால் வெற்றி பெற்று இறுதிப் போட்டிக்கு தெரிவாகியுள்ளது. முதலில் துடுப்பெடுத்தாடிய கிறஸ்கொப்பர்ஸ் அணி 30 ஓவர்களில் சகல இலக்குகளையும் இழந்து 183 ஓட்டங்களை பெற்றுக்கொண்டது.

கஜித்-32, கோகுலன்-31, அஜித்-29 ஓட்டங்களை பெற்றுள்ளனர். பந்து வீச்சில் யாழ்.ஜொனியன்ஸ் அணியை சார்ந்த கிஸாந்துஜன் 27 ஓட்டங்களை கொடுத்து 4 இலக்குகளையும், விதுஸன் 25 ஓட்டங்களை கொடுத்து 2 இலக்குகளையும், சண்சயன் 99 ஓட்டங்களை கொடுத்து 1 இலக்கினையும் கைப்பற்றியிருந்தனர். 184 ஓட்டங்களை வெற்றி இலக்காக கொண்டு களமிறங்கிய யாழ். ஜொனியன்ஸ் அணி 26.4 ஓவர்களில் சகல இலக்குகளையும் இழந்து 138 ஓட்டங்களை பெற்றுக்கொண்டது. சௌமிகன் - 20, கிஸார்ந்துஜன் -19, சண்சயன்-19 ஓட்டங்களை பெற்றனர்.

பந்து வீச்சில் கிறஸ்கொப்பர்ஸ் அணியை சார்ந்த அஜித் 25 ஓட்டங்களை கொடுத்து 3 இலக்குகளையும், ரசிகரன் 19 ஓட்டங்களை கொடுத்து 2 இலக்குகளையும், ஜனன்தன் 25 ஓட்டங்களை கொடுத்து 2 இலக்கினையும் கைப்பற்றியிருந்தனர். இப் போட்டியில் சிறந்த வீரராக கிறஸ் கொப்பர்ஸ் அணியைச்சார்ந்த அஜித் தெரிவாகியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (நி-5-6)

## வெளிநாட்டு...

குழுவால் தடுத்து வைக்கப்பட்டுள்ள இலங்கையர்கள் தொடர்பில் பாராளுமன்ற உறுப்பினர்களான வசந்த யாப்பா பண்டார, ஹர்ஷ டி சில்வா கேள்வியெழுப்பிய போது அதற்கு பதிலளிக்கும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

இது தொடர்பில் மேலும் கருத்து தெரிவித்த அவர், "மியன்மார் சைபர் கிரைம் பகுதியில் இந்தியா, பாகிஸ்தான், பங்களாதேஷ் மற்றும் நேபாளம் நாட்டை சேர்ந்தவர்கள் தடுத்து வைக்கப்பட்டுள்ளார்கள்.

இவர்களை நாட்டுக்கு அழைத்து வர இராஜதந்திர மட்டத்தில் பேச்சுவார்த்தைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

திறந்த விசா ஊடாக வெளிநாடு செல்வதைத் தவிர்த்துக் கொள்ள வேண்டும். சிங்கள மொழி பேச தெரியாத, தமிழ் மொழி பேசுபவர்களே அதிகளவில் பாதிக்கப்பட்டுள்ளார்கள்.

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் உள்ளவர்கள்தான் வெளிநாட்டு தொழில் இடைத்தரகர்களினால் பாதிக்கப்பட்டுள்ளார்கள் எனக் குறிப்பிட்டார். (ம-7,10)

## கருத்துச்...

ஜெனிவா மனித உரிமைகள் பேரவையில் இலங்கை தொடர்பான விடயங்கள் நேற்று முன்தினம் முன் வைக்கப்பட்டது.

.அங்கு கருத்துத் தெரிவித்த ரீட்டா பிரெஞ்ச்,

இணையவழி பாதுகாப்புச் சட்டம் நாட்டில் அனைத்து வகையான வெளிப்பாடுகளையும் குற்றமாக்கலாம்.

இது கருத்துச் சுதந்திரத்தின் மீது பாரிய தாக்கத்தை ஏற்படுத்தும்.

எனவே இலங்கையின் மனித உரிமைகள் கடமைகள் மற்றும் அர்ப்பணிப்புகளுடன் குறித்த சட்டத்தில் திருத்தங்களை முன்வைக்குமாறு நாம் இலங்கை அரசாங்கத்தை கோருகின்றோம்.

பயங்கரவாத எதிர்ப்புச் சட்டத்திற்கு பதிலாக இலங்கையின் சர்வதேசக் கடமைகளுக்கு இணங்க சட்டங்கள் கொண்டுவரப்பட வேண்டும்.

பயங்கரவாத எதிர்ப்புச் சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்களை விடுவிப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். கடந்த நவம்பர் மாதம் தடுத்துவைக்கப்பட்ட 9 தமிழர்கள் அண்மையில் விடுவிக்கப்பட்டமை வரவேற்கத்தக்க விடயமாகும்.

அதேவேளை பயங்கரவாதத் தடைச் சட்டத்தின்கீழ் மிகநீண்டகாலமாகத் தடுத்து வைக்கப்பட்டிருப்போரை விடுவிக்குமாறும், பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் பிரயோகத்தை இடைநிறுத்துமாறும் இலங்கை அரசாங்கத்தை வலியுறுத்துகின்றோம் என அவர் மேலும் தெரிவித்தார். (ம-7,10)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 3056

### துஷா

இந்த கொசு ரத்தத்தை உறிஞ்சுவதற்கு பதிலா கொஞ்சம் கொழுப்பை உறிஞ்சலாம்...



இங்க நிறைய பேருக்கு இதுதான் கொஞ்சம் ஜாஸ்தியா இருக்கு...

### சுபா


மாத சம்பளம் என்பது உல முக்குன பன்னு மாதிரி



பொசுக்குன்னு விழுந்து கரைந்து விடுகிறது.


### குமார்

யாரும் யாரையும் நல்லவன் கெட்டவன்னு பாக்குறது இல்ல...



நாளைக்கு இவன் தேவ படுவானா இல்லையானு தான் பாக்குறாங்க..

### பவிசன்



ஒரு ஈ என்னைய சுத்தி சுத்தி வந்துச்சு...
என்னோட பழைய காதலியா இருக்குமோன்னு மனைவியிடம் சொன்னேன்...
மதிச்சே கொன்னுட்டா...

### ரஜி


முன்னாடியெல்லாம் வாயுள்ள பிள்ளை பிழைச்சுக்கும் என்னு சொல்லுவாங்கா...



இப்ப எல்லாம் ஜால்ரா அடிக்கிற பிள்ளை பிழைச்சுக்கும் என்னு சொல்றாங்க...

### தர்ஷா

பாவம் அந்த குருவிக்கு தெரியாது...



பணம் இருந்தால் மட்டுமே "தண்ணீர்" என்று...!

நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயருடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உள்ளூர் வளங்கள் அழிக்கப்படுவதற்கு எதிராக புங்குடுதீவில் கவனயீர்ப்பு போராட்டம்



(யாழ்ப்பாணம்)

உள்ளூர் வளங்களை அழிப்பதற்கு எதிர்ப்புத் தெரிவித்து தீவக சிவில் சமூகம் அமைப்பின் ஏற்பாட்டில் புங்குடுதீவு கடற்றொழிலாளர்கள் சங்கத்தினரால் கவனயீர்ப்புப் போராட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது.

கடலட்டைப் பண்ணை எனும் பெயரில் உள்ளூர் மீனவர்களை முற்றாக புறக்கணித்து இலாப நோக்கில் வெளிமாவட்டம் மற்றும் தென்னிலங்கையை சேர்ந்தவர்களுக்கு கடலட்டை பண்ணைகள் அமைப்பதற்குரிய அனுமதிகளை கடற்தொழில் அமைச்சு வழங்குவதற்கு எதிராகவும் பாரம்பரிய மீன்பிடி தொழிலை அழிப்பதற்கு எதிராகவும் புங்குடுதீவில் நடைபெற்றுவருகின்ற சட்டவிரோத மண் அகழ்வை உடனடியாக தடுக்கக்கோரியும் தொடர்ச்சியாக அழிக்கப்பட்டு வருகின்ற கால்நடை வளத்தை பாதுகாக்க கோரியும் குறித்த கவனயீர்ப்பு போராட்டம் இடம்பெற்றது.

யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் மற்றும் தீவகம் தெற்கு பிரதேச செயலாளருக்கான மகஜர் ஒன்றும் கையளிக்கப்பட்டிருந்தது. (நி-5-6-33)

## இலங்கையில் தீவிரமடையும் வறட்சி
### நீரைச் சிக்கனமாகப் பயன்படுத்துமாறு அறிவுறுத்தல்

(கொழும்பு)

நீரைச் சிக்கனமாகப் பயன்படுத்துமாறு நீர்ப்பாசனத் திணைக்களம் பொது மக்களுக்கு அறிவுறுத்தியுள்ளது.

நிலவும் வறட்சி காரணமாக தற்போது ஏற்பட்டுள்ள நீர் தட்டுப்பாடு காரணமாக இந்த அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது.

தற்போது நிலவும் அதிக வெப்பம் மற்றும் வரட்சியான காலநிலை காரணமாக நீர் நுகர்வு பெருமளவு அதிகரித்துள்ளது.

மேலும் குடியிருப்புகள் மற்றும் அலுவலகங்களில் உள்ள குடிநீரை செடிகள் மற்றும் தோட்டங்களுக்கு பாய்ச்சுவதற்கு வீணாக்காமல் சிக்கனமாக பயன்படுத்த வேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. (நி-5-6)

## சிவராத்திரி ஆகிய ஒருநாள் வழிபாடு சிவபெருமானுக்கு சமீபத்தில் இருந்து மனம், மொழி, மெய் இம் மூன்றும் சிவத்திடமே இருப்போம் "ஓம்நமசிவாய" எல்லா நலன்களையும் பெறுவோம்

**மண்ணுலககத்தினில் பிறவி மாசற**
**எண்ணிய பொருளெலாம் எளிதில் முற்றுறக்**
**கண்ணுதல் உடையதோர் களிற்று மாமுகப்**
**பண்ணவன் மலரடி பணிந்து போற்றுவாம்.**

உலகத்தில் முத்தி அளிக்கக் கூடிய விரதங்கள் நான்காகும். அவை சிவார்சனை, உருத்திரபாராயணம், சோமவாரம், பிரதோசம் ஆகும். மாசி மாதத்தில் வரும் மகா சிவராத்திரி மிகவும் அருட்சிறப்பும் அதி உத்தமமானதும் ஆகும். "ஓம் நமசிவாய"

சிவராத்திரி 08.03.2024 வெள்ளிக்கிழமை விடியற்காலை சிவ,சிவ என நாமத்துடன் எழுந்து தந்த சுத்திசெய்து நீராடி நித்திய கர்மானுஷடானங்களை முடித்து சிவ, சிவ எனச் சூரிய பகவானை வணங்கி, சிவசிவ எனத் திருநீறு அணிந்து (நீறு நெற்றியில் பரவி அணிந்து) ஆசார சீலராக ஆயம் சென்று முக்கரண சுத்தியுடன் சிவபெருமானை சரணாகதி அடைந்து எம்பெருமானை வணங்கி, வாமதேவா! மஹாதேவா! சதாசிவா, நீலகண்டா! சிவனே உன் அபயம் நானே எனவும் உமது கருணையால் சிவராத்திரி விரதம் அனுஷ்டிக்க வேண்டும் என அதிக ஆவலுடன், சிவசிந்தனையுடன் சிவராத்திரி முடியும் வரை காமம் முதலிய தீய சக்திகள், எமை அணுகாமலும் தீயவர்களுடன் வீண் வார்த்தை பேசாமலும் நம் ஐம்புலன்களைப் பொருத்தமற்ற இடங்களில் செலுத்தாமலும் இமைப்பொழுதும் பெருமான் நாமமாகிய "ஓம்நமசிவாய" எனவும் சிவபுராணங்களாகிய திருவாசகம், திருமுறைகளையும் ஓதியும் தியானிக்கவும் அருள வேண்டும் என பிரார்த்திப்போம்.

சிவராத்திரி நாள் முழுவதும் நாம் சிவபெருமானுக்குச் சமீபத்தில் இருந்து பிறவார்த்தை பேசாது கண்விழித்து சிவசிந்தனையுடன் இருந்து திருவைந்தெழுத்தாகிய "ஓம்நமசிவாய" செபித்தல் வேண்டும்.

இது ஒருநாள் வழிபாடு ஆயிரம் நாள் சிவபூசை செய்த பலனை அளிக்கும் என அருளார்கள் அனுபவத்தால் கூறியுள்ள உண்மையாகும். **சிவராத்திரி போன்ற புண்ணிய நாட்களில் வழிபடுதல் அளவிலா நலன்களை அளிக்கும் சிவம் என்ற சொல்லுக்குத் துன்பத்தை நீக்கி இன்பத்தை அளிப்பவர் என்று பொருள்.** சிறிய வழிபாட்டினால் பெரிதும் மகிழ்ச்சி அடைபவர் சிவபெருமான்.

இந்நாளில் செய்யும் தான தருமங்கள், மந்திர செபங்கள், ஆலயத்துக்கு பால்,தயிர், நெய் (சுத்தமான நெய்) ஓமத்திரவியங்கள் யாவும் பலநூறு மடங்காகப் பெருகி, இம்மையில் எல்லா நலன்களையும் அளித்து மறுமையில் முத்தியும் அளிக்கும் என்பது அருளாளர்கள் அனுபவத்தால் கூறிய உண்மையாகும். (இறை அருளுடன் சிவராத்திரி நான்குகால நேரத்தில் ஓத வேண்டிய தமிழ்வேதம் பதிகங்கள் நாளை அன்புடன் ஓம்நமசிவாய) சிவராத்திரி வழிபாடு எத்தகைய தீவினையும் நீக்கும். நலமே பெறலாம். உலகில் அமைதியே விளங்கும். "ஓம்நமசிவாய"

அன்பான சிவ ஆவனங்களைப் பத்திரப்படுத்தி எல்லோரது அன்பு உள்ளங்களுக்கு அன்புடன் சமர்ப்பிப் போம். ஓம்நமசிவாய.



க.கு.க சிவபாலன்
போசகர்
காரைநகர் திருத்திண்ணபுர
மாணிக்கவாசகர்
மடாலயம்.

(சி-8471)

## நம்பிக்கையில்லாப் பிரேரணை கையளிப்பு

(கொழும்பு)



சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன மீதான நம்பிக்கையில்லா பிரேரணை பாராளுமன்ற பிரதி செயலாளர் நாயகம் சமிந்த குலரத்னவிடம் கையளிக்கப்பட்டது.

எதிர்க்கட்சியின் . பிரதம கொறடா லக்ஷ்மன் கிரியெல்ல, பாராளுமன்ற உறுப்பினர்களான ரஞ்சித் மத்தும பண்டார மற்றும் பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ் ஆகியோரினால் குறித்த நம்பிக்கையில்லா பிரேரணை கையளிக்கப்பட்டது.

இந்த பிரேரணையில் 41 பாராளுமன்ற உறுப்பினர்கள் கையெழுத்திட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (நி-5-6)

## இராசிபலன்

06.03.2024
மாசி 23, புதன்கிழமை
ஏகாதசி பின்னிரவு 12.24 மணிவரை
பூராடம் முற்பகல் 10.52மணிவரை

சுபநேரம் 04.55-6.25மணிவரை
இராகுகாலம் 12.25- 1.55 மணிவரை
ஏகாதசி விரதம்

சந்திராஷ்டமம்.
ரோகினி , மிருகசீரிடம்

வளவன்



**மேஷம்**: ஆரோக்கியத்தில் அக்கறை காட்டவேண்டிய நாள், அச்சுறுத்தல்கள் அகலும், நல்லவர்களை சந்தித்து நலம் காணும் நாள், எதிர்பாக இருந்தவர்கள் மனம் மாறுவார்கள்.



**கடகம்**: வியாபார விருத்திக்கு வித்திடுவீர்கள், உறவினர்களின் சந்திப்பால் உள்ளம் மகிழ்வீர்கள், மருத்துவ செலவுகள் குறையும் வாய்ப்புண்டு, போசனசுகமுண்டு.



**துலாம்**: நீண்ட நாளைய விருப்பம் ஒன்று நிறைவேறும் வாய்ப்புண்டு, உடன் பிறப்புக்கள் வழியில் உற்சாகம் தரும் செய்திகள் வந்து சேரலாம், சுற்றத்தார் வரவால் சுகம் கூடும் நாள்



**மகரம்**: தொழில் ரீதியான ஊர்மாற்றம் இடமாற்றம் என்பன இடம் பெறலாம், சயனசுகக் குறைவுகள் ஏற்படலாம், தேக நலனில் அக்கறை கூடும் நிலையுண்டு.



**ரிஷபம்**: உறவினர்கள் நண்பர்களிடம் பேசும் போது அதிக கவனம் தேவை , கடவுளை வழிபட்டு காரியம் தொடங்க வேண்டிய நாள், கௌரவக் குறைவான சம்பவங்கள் இடம்பெறலாம்.



**சிம்மம்**: வாழ்க்கைத்தரம் உயர வழிவகை செய்வீர்கள், பிள்ளைகள் வழியில் பெருமையான சம்பவங்கள் இடம்பெறலாம், பூர்வீகச் செய்தி சம்பந்தப்பட்ட வகையில் நன்மையுண்டு.



**விருச்சிகம்**: வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும், எடுத்த காரியங்களில் கண்ணும் கருத்துமாக இருப்பீர்கள், குடும்பத் தேவைகள் எளிதில் பூர்த்தியாகும்.



**கும்பம்**: அன்னிய தேசத் தொடர்புகள் எண்ணியபடி கைகூடும், எதிர் பார்த்த தனவரவுகள் கிடைக்கும் வாய்ப்புண்டு, புதிய பொருட்களை வாங்கும் எண்ணம் உருவாகும்.



**மிதுனம்**: சந்தித்தவர்களால் சந்தோசம் கிடைக்கும், அலங்காரப் பொருட்களை வாங்கும் எண்ணம் உருவாகும், குடும்பத்தினரிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும்.



**கன்னி**: நண்பர்கள் நம்பிக்கைக்குரியவர்களாக நடந்து கொள்வார்கள், பெற்றோர்கள் மீது பிரியம் கூடும், கொள்கைப் பிடிப்போடு நடந்து கொள்வீர்கள், சுப விரயங்கள் கூடும் வாய்ப்புண்டு.



**தனுசு**: எதிர்பாராத காரியம் ஒன்று நடைபெறும் வாய்ப்புண்டு, வழிபாட்டால் இன்பம் காண வேண்டிய நாள், சவால்களை சாமர்த்தியமாக சமாளிப்பீர்கள்.



**மீனம்**: சேமிப்பை அதிகரிக்கும் எண்ணம் உருவாகும், உற்சாகத்துடன் பணிபுரிவீர்கள், தொலைபேசி வழியில் மகிழ்ச்சி தரும் தகவல்கள் வந்துசேரலாம்.

புகழ்ச்சியால் அழிவதை விட இகழ்ச்சியால் வளரலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்திய மீனவர்களின் அத்துமீறலை கண்டித்து யாழில் போராட்டம்

(யாழ்ப்பாணம்)

**இலங்கை கடற்பரப்பிற்குள் அத்துமீறி மீன்பிடியில் ஈடுபடும் இந்திய மீனவர்களை தடுத்து நிறுத்த வலியுறுத்தி யாழில் மீனவர்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர்.**





வட மாகாண கடற்தொழிலாளர் இணையம், தேசிய மீனவர் ஒத்துழைப்பு இயக்கம், இலங்கை மீனவர் மக்கள் தொழிற்சங்கம் உள்ளிட்ட மீனவ அமைப்புக்கள் இணைந்து யாழ்.மாவட்டச் செயலகம் முன்பாக கவனயீர்ப்பு போராட்டத்தை முன்னெடுத்திருந்தனர்.

இதனைத் தொடர்ந்து யாழிலுள்ள இந்திய துணைத் தூதரகம் வரை பேரணியாகச் சென்றனர்.

இதன்போது இந்திய துணை தூதரகத்திற்கு செல்லும் வழியில் பொலிஸார் இடைமறித்ததால் பதற்றநிலை ஏற்பட்டது.

பொலிஸாரால் இடைமறிக்கப்பட்ட போராட்டகாரர்கள் இலங்கை மீனவர்களின் கடல் வளத்தை அழிக்காதே, தமிழக மீனவர்களின் அத்துமீறலை தடுத்து நிறுத்து, மீனவர்களின் வாழ்வாதாரத்தை அழிக்காதே உள்ளிட்ட பல்வேறு வாசகங்கள் எழுதப்பட்ட பதாகைகளைத் தாங்கியவாறு இலங்கை-இந்திய அரசுகளுக்கு எதிராக கோசங்களை எழுப்பியவாறு போராட்டத்தில் ஈடுபட்டிருந்தைத் தொடர்ந்து மீனவ அமைப்புகளின் பிரதிநிதிகள் தூதரகத்திற்குள் சென்று தங்களது கோரிக்கைகள் அடங்கிய மகஜர் ஒன்றினை கையளித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (நி-5-6-33)

# மெய்வல்லுநர் போட்டிகள்

(யாழ்ப்பாணம்)

யா/ இராமநாதன் கல்லூரியின் இல்ல மெய்வல்லுநர் போட்டி இன்று புதன்கிழமை பி.ப 1 மணிக்கு கல்லூரி மைதானத்தில் கல்லூரியின் அதிபர். திருமதி. அம்பிகை சிவஞானம் தலைமையில் இடம்பெறவுள்ளது.

மேற்படி நிகழ்வில் வடமாகாண கல்விப் பணிப்பாளர் ஜோண் குயின்ரஸ் பிரதம விருந்தினராகவும் உடுவில் கோட்டக்கல்விப் பணிப்பாளர் எஸ்.இராமநாதன் சிறப்பு விருந்தினராகவும் கோப்பாய் கல்வியியற் கல்லூரியின் ஓய்வு பெற்ற உடற்கல்வி விரிவுரையாளர் செல்வி கிரியா கந்தசாமி மற்றும் உடுவில் பிரதேச செயலக அபிவிருத்தி உத்தியோகத்தரும் பழைய மாணவியுமான திருமதி. கௌதமி ஜசோதன் ஆகியோர் கௌரவ விருந்தினராகவும் கலந்து சிறப்பிக்க உள்ளனர். (நி-5-6)

• • • • • • • • • • • • • • • • • • • • • • • • •

(யாழ்ப்பாணம்)

யா/சுழிபுரம் வடக்கு ஆறு முக வித்தியாலயத் தின் இல்ல மெய்வல்லுநர் போட்டியானது நாளை [illegible] வியாழக் கிழமை பி.ப 1 மணிக்கு பாட சாலை மைதானத்தில் அதிபர் சி.சுதாகரன் தலைமையில் இடம்பெறவுள்ளது.

பிரதம விருந்தினராக வலி காமம் கல்வி வலயத்தின் பிரதிக் கல்விப் பணிப்பாளர் சிவசம்பு மதியழகன் கலந்து கொள்ளவுள்ளார். (5-6)

# நிர்வாகத் தெரிவுக்கூட்டம்

(யாழ்ப்பாணம்)

அகில இலங்கை திருவள்ளுவர் மகாசபையின் 2024ஆம் ஆண்டிற்கான புதிய நிர்வாகத் தெரிவுக்கூட்டம் எதிர்வரும் 10 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு சுன்னாகம்றோ.க. த.க பாடசாலையின் அ.இ.தி மகாசபையின் தலைவர் நாகன் கிருஷ்ண பிள்ளை தலைமையில் இடம்பெறவுள்ளது. (நி-5-6)

# திருமறைக் கலாமன்றத்தில் நாடகப் பயிலக கற்கைநெறி

(யாழ்ப்பாணம்)

நாடகக் கலையின் மேம்பாடு கருதி செயல்முறை சார்ந்த தேர்ச்சியினை மேம்படுத்தும் நோக்கோடு திருமறைக் கலாமன்றத்தின் நாடகப் பயிலகத்தால் கடந்த 1992 ஆம் ஆண்டு முதல் நடத்தப்பட்டு வருகின்ற நாடக அரங்கியலுக்கான சான்றிதழ் கற்கைநெறியின் 2024 ஆம் ஆண்டுக்கான புதிய பிரிவு எதிர்வரும் 9 ஆம் திகதி சனிக்கிழமை பி.ப. 3.30 மணிக்கு இல. 238, பிரதான வீதி,யாழில் அமைந்துள்ள மன்றத்தின் கலைத்தூது மணிமண்டபத்தில் ஆரம்பமாகவுள்ளது.

இப்பயிற்சி நெறியில் நாடகக் கலையில் ஆர்வம் உள்ளவர்களும் நாடகமும் அரங்கியலும் பாடத்தின் தரம்11,12,13 களில் பயிலும் ஆர்வமுள்ள மாணவர்களும் இணைந்து கொள்ள முடியும்.

ஆறுமாதங்களைக் கொண்ட இப்பயிற்சிநெறிக்கான வகுப்புக்கள் சனி,ஞாயிறு தினங்களில் பி.ப.3.30 மணிதொடக்கம் 5.30 மணிவரை நடைபெறவுள்ளது.

இப்பயிற்சி நெறி யில் நாடக எழுத்துருவாக்கம், நடிப்பு, நெறியாள்கை, அரங்கத் துணைக்கலைகள் (வேட உடை, ஒப்பனை, காட்சி விதானிப்பு, இசை,ஒளி விதானிப்பு), நாடகத் தயாரிப்பு, கூத்துப் பயிற்சிகள் போன்றவை பிரதான அம்சங்களாக அமையும்.

இப்பயிற்சிநெறியில் இணைந்து கொள்ள விரும்புபவர்கள் ஆரம்ப நிகழ்வுக்கு வருகை தருவதன் மூலம் இணைந்து கொள்ள முடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (நி-5-6)



வல்வெட்டித்துறை நோயாளர் நலன்புரி சங்கத்தின் ஒழுங்கமைப்பில் 75 ஆவது இரத்ததானம் முகாம் கடந்த ஞாயிற்றுக்கிழமை வல்வெட்டித்துறை நெடியாகாடு கணபதி மஹால் திருமண மண்டபத்தில் இடம்பெற்றது. (படம்:-மகாலிங்கம்)


# கல்யாணமாலை

## சர்வதேச திருமண சேவை

**இவர்களுக்கு மணமகள் தேவை**

பிறப்பு :1995- இந்து
நட்சத்திரம்: கேட்டை
கி.பா: -
உயரம்: 6
தகைமை/தொழில்: A/L ,Accountant
எதிர்பார்ப்பு: படித்தவர், உத்தியோகம்
தொ.இ: B/14054

பிறப்பு:1996 -இந்து
நட்சத்திரம்: விசாகம்
கி.பா: -
உயரம்:5' 11"
தகைமை/தொழில்- Canada University, pvt Company
எதிர்பார்ப்பு: A/L படித்தவர். ஆங்கில அறிவுள்ள பெண்
தொ.இ: B/14056

பிறப்பு: 1994 -இந்து
நட்சத்திரம்:திருவோணம்
கி.பா: - 14
உயரம்: 158 CM
தகைமை/தொழில்: O/L (France)
எதிர்பார்ப்பு: படித்த அழகான பெண்
தொ.இ: B/14059

பிறப்பு: 1991- இந்து
நட்சத்திரம்: விசாகம்
கி.பா: -

**இவர்களுக்கு மணமகன் தேவை**

பிறப்பு-1991 -இந்து
நட்சத்திரம்: சுவாதி
கி.பா-9 ½ சூரி செவ் 10 இல்
உயரம்: 168 CM
தகைமை/தொழில்:B.sc (விரிவுரையாளர்)
எதிர்பார்ப்பு: பட்டதாரி /உத்தியோகம்
தொ.இ: G/14087

பிறப்பு-1993-இந்து
நட்சத்திரம்: சுவாதி
கி.பா: -
உயரம் : 5
தகைமை/தொழில்: BA
எதிர்பார்ப்பு: அரச உத்தியோகம்
தொ.இ: G/14088

பிறப்பு -1991- இந்து
நட்சத்திரம்: கேட்டை
கி.பா:.-
உயரம்:5' 7"
தகைமை/தொழில்:NND IT (Instructor), (pvt)
எதிர்பார்ப்பு: பட்டதாரி அரச, தனியார் உத்தியோகம்
தொ.இ: G/14089

பிறப்பு: 1998 -இந்து
நட்சத்திரம் -அச்சுவினி
கி.பா:- 17
உயரம்: 4' 11"
தகைமை/தொழில்: NDT (Teacher)
எதிர்பார்ப்பு: வெளிநாடு
தொ.இ: G/14090

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 4000 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 500 அறவிடப்படும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிளி/வேம்போடுகேணி சி.சி.த.க பாடசாலை பிரதி அதிபர் திரு.கந்தையா சுந்தரலிங்கம் அவர்களின் மணிவிழா சிறப்புமலர்



### செஞ்சொற்செல்வர் அவர்களின் ஆசிச்செய்தி

பளை இத்தாவில் திரு.கந்யைா சுந்தரலிங்கம் அவர்களை நீண்ட காலமாக யான் அறிவேன். எனது சகோதரனின் மாணவனாக 1978 இல் சந்தித்தேன். அன்று முதல் இன்று வரை அன்பாகப் பழகும் இனிய சகோதரன். அன்னாரது அகவை அறுபது பூர்த்தி குறித்து அவரது நண்பர்கள் எடுக்கும் மணிவிழாக் குறித்து ஆசிச்செய்தி வழங்குவதில் மிகவும் ஆனந்தமடைகிறேன்.

தனது மாணவப்பருவம் முதல் பொதுப்பணிகளில் ஆர்வமுடைய வராகப் பல வரலாற்றுப் பணிகளில் அங்கம் வகித்தவர். சாரணி யத்தில் சாதனை படைத்த இவர் சாதித்தவை ஏராளம். பளை மத்திய கல்லூரியின் புகழ் பூத்த அதிபராக விளங்கிய அமரர். அ.வொ.செல் லையா அவர்களின் ஆற்றுப்படுத்தலில் இவர் பங்குபற் றிய பொதுநலத் தொண்டுகள் மறக்க முடியாதவை. மரம் நடுகை முதல் மனிதநேயப் பணிகள் பல செய்த இவரது வாழ்வு தனித்து வமானது.

உயிரைத் துச்சமாக மதித்து இளவுணர்வோடு சந்தித்த சாவால்கள் பல. ஆசிரிய வாழ்விலும் அவன்ர அறியாதவர்களில்லை. மணிவிழாக்காணும் நண்பர் சகல சிறப்போடும் நிறைவாக வாழ நல் வாழ்த்துக்களையும் ஆசிகளையும் தெரிவித்து அமைகிறேன்.

**கலாநிதி.ஆறு.திருமுருகன்,**
**தலைவர் ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்,**
**தெல்லிப்பழை, தலைவர், சிவபூமி அறக்கட்டளை.**



### வாழ்த்துச் செய்தி

ஆரம்பக் கல்வியைக் கற்ற பாடசாலையிலேயே ஆசிரியராக சேவையாற்றிய சந்தர்ப்பம் கிடைத்தது மட்டுமல்லாது அப்பாடசாலையின் உபஅதிபராக இருந்து சேவையிலிருந்து ஓய்வுபெறுவது என்பது மிக மகிழ்வான விடயமாகும். ஆசிரியத்தொழிலில் கொண்டிருந்த மிகுந்த விருப்பம் காரணமாக தொண்டராசிரியாராக சேவையை ஆரம்பித்து விவசாய விஞ்ஞான பயிற்சிபெற்ற ஆசிரியராகத் தன்னை மாற்றியமைத்து பல பாடசாலைகளில் ஆசிரியராகவும் பிரதி மற்றும் உப அதிபராகவும் தனது கல்விப் பணியை ஆற்றியது மட்டுமல்லாது சமூகப் பணி தொடர்பிலும் காத்திரமான பங்கு வகித்த திரு.கந்தையா சுந்தரலிங்கம் அவர்களுடைய பணி மிகவும் பாராட்டுக்குரியது.

மிகவும் துடிப்பான செயற்பாடும் தவறுகளைத் தட்டிக் கேட்கும் பண்பும், மொழி, இனம், பிறசேவை என்பவற்றின்மீது அதீத அக்கறையும் கொண்ட செயற்திறன் மிக்க ஒருவராக விளங்கும் மணிவிழா நாயகனின் கல்விப்பணி மற்றும் சமூகப் பணிக்காக அவரை வாழ்த்துவதோடு அவருடைய ஓய்வுக்காலம் மிகவும் அமைதியான சந்தோசம் மிக்கதாகவும் அமைந்து குடும்பத்தாருடன் மகிழ்வாக வாழ எல்லாம் வல்ல இறைவனின் ஆசி வேண்டி வாழ்த்துவதில் பெரு மகிழ்வடைகின்றேன்.

**அருளானந்தம் சிவனகுள்ராசா,**
**வலயக்கல்விப் பணிப்பாளர்,கிளிநொச்சி வடக்கு.**



### வாழ்த்துச் செய்தி

பளை இத்தாவிலைச் சேர்ந்த திரு.கந்தையா சுந்தரலிங்கம் அவர்களை எனக்கு அவரது மாணவப் பருவத்திலிருந்தே தெரியும். எனக்கும் அவருக்குமான தொடர்பு அரை நூற்றாண்டுகளுக்கும் மேலானது. அவர் பளை மகாவித்தியாலயத்தில் மாணவனாக இருந்து ஒரு சாதனை மனிதனாக விளங்கினார் என்பது குறிப்பிடத்தக்கது.

கல்வியில் மிகவும் பின் தங்கிய பிரதேசமாக கிளிநொச்சி தொகுதி விளங்கிய போதும் மாணவர்களின் உழைப்பினாலும் முயற்சியி னாலும் பளை மகா வித்தியாலயம் சிறப்பான பாடசாலையாக மிளிர் ந்தது. அன்றைய நாட்களில்பாடசாலைக்கு தேவையான வைகளை தங் களது செயற்பாடுகளின் மூலம் உணர்த்தக்கூடிய சிறந்த மாணவர்கள் விளங்கினார்கள். அந்தவகையில் ஒருமுறை பாடசாலை இல்ல விளையாட்டுப்போட்டிக்கு என்னை அழைத்திருந்தார்கள்.

கிளிநொச்சி தொகுதியிலிருந்து முதல் முதலாக பல்கலைக்கழகம் சென்ற பளை மகாவித்தியாலயத்தில் கல்வி கற்ற மாணவிக்கு அன்றைய ஒருமாத எனது ஊதியமான 1000/- ரூபாவை கையளித்த நிகழ்வை மிக சிறப்பாக தம்பி சுந்தரலிங்கம் நடத்தியிருந்தார் என்பது இன்றும் எனக்கு நினைவிருக்கிறது. இவரைப் போன்ற எமது சமூகத்தின் மீதும் கல்வியின் மீதும் அக்கறை கொண்ட பலர் உருவாக வேண்டும் என்பது தான் எனது அவாவும் பிரார்த்தனையுமாகும்.

**வீ.ஆனந்தசங்கரி, செயலாளர் நாயகம்,**
**தமிழர் விடுதலைக் கூட்டணி.**



### வாழ்த்துச் செய்தி

எங்களின்மதிப்பிற்குரிய சகாவான திரு.க.சுந்தர லிங் கத்திற்கு, எண்ணற்றவர்களின் பாதையை ஒளிரச் செய்த கல்வியின் தேசபக்தருக்கு மணிவிழா வாழ்த் துக்களை கௌரவத்துடன்பகிர்ந்து கொள்ளுகின்றேன்.

கல்விப்புரட்சியினூடான முன்னேற்றத்திற்கான அவரது அர்ப்பணிப்பு, தொழிலைக் கடந்து அறிவாற்றலின் மீதான ஆழமான அன்பையும் அதனை மீழெளச் செய்யும் தீவிர நம்பிக்கையுடன் மொழியின் இருப்புக்கான உழைப்பும் குறிப்பிடத்தக்கது. அவரது தொழில் வாழ்க்கை முழுவதும், கல்விப் பணியின் மிக உயர்ந்த இலட்சியங்களை அவர் கடைப்பிடித்து அதற்கேற்றவகையில் அணுகல், சமத்துவம் மற்றும் கற்றலில் சிறந்து விளங்குவதற்கு தந்தி ரோபாயங்கள் பயன்படுத்தி தனது சேவையை வழங்கியவர்.

இன்று, சுந்தரலிங்கத்தின் கல்விக்கான பயணத்தை நாம் போற்றும் வேளையில், அறிவின் பொறுப்பாளர்களாகவும், வாய்ப்பின் சிற்பிகளாகவும், முன்னேற்றத்தின் வெற்றியாளர்களாகவும், அவரது அடிச்சுவடுகளைப் பின்பற்றி, கல்வியின் உன்னதமான தேடலுக்கு ஒவ்வொருவரும் நம்மை அர்ப்பணிப்போம்.

காலத்தின் தேவையால் இவரது அரச சேவை நிறைவு பெற்றாலும் இவரது சேவை கல்விப்புலத்திற்கு அவசியமென்பதை உணர்வதுடன் எதிர்காலத்தில் இவர் மேலும் சிறப்பாக உடல், உள வளமான வாழ்விற்கு இறை ஆசி வேண்டி நிற்பதுடன் இவரது பணிகளுக்கு உறுதுணையாக இருந்து வந்த இவரின் மனைவி, பிள்ளைகள் உள்ளிட்ட குடும்பத்தினருக்கும் நன்றிகளையும் நண்பர்கள் சார்பில் கூறி விடை பெறுகின்றேன்.

**கலாநிதி. சுப்ரமணியம் பரமானந்தம்.**
**ஓய்வுநிலைப் பீடாதிபதி,**
**யாழ்ப்பாணம் கல்வியியற் கல்லூரி.**



## திரு.கந்தையா சுந்தரலிங்கம் SLTS-I

ஆரம்பக்கல்வி: 1-5 கிளி/வேம்போடுகேணி சி.சி.த.க பாடசாலை
இடைநிலை, உயர் கல்வி: 6-13 கிளி/பளை மகாவித்தியாலயம்
1984-1988 - தொண்டர் ஆசிரியர் -கிளி/பளை மகா வித்தியாலயம்
06.08.1988- அரச முதல் நியமனம்
06.08.1988- 26.08.1988 வரை சேவை முன் பயிற்சி
அ.நு.கெக்கிராவை மத்திய கல்லூரி
28.09.1988- கிளி/முழங்காவில் மகாவித்தியாலயத்தில்
முதல் நியமனம் 01.09.1990 வரை
02.01.1990-31.12.1991 வரை யா/பலாலி ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையில் விவசாய விஞ்ஞான பயிற்சி
01.01.1992-02.02.1992 வரை கிளி/முழங்காவில் மகாவித்தியாலயம்
03.02.1992-02.06.1993 வரை
கிளி/வேம்போடுகேணி சி.சி.த.க பாடசாலை
03.06.1993-31.12.1995 வரை கிளி/பூநகரி மகாவித்தியாலயம்
-பிரதி அதிபர்
01.01.1996-31.12.1996 வரை கிளி/வேம்போடுகேணி சி.சி.த.க பாடசாலை உப அதிபர்
01.01.1997-01.01.2007 வரை கிளி/முழங்காவில் மகாவித்தியாலயம்
02.01.2007-31.05.2009 வரை
கிளி/உமையாள்புரம் அ.த.க.பாடசாலை
01.01.2009- 02.12.2013 வரை - சேவை முறிவு
03.12.2013-10.10.2021 வரை
கிளி/வேம்போடுகேணி சி.சி.த.க. பாடசாலை- உப அதிபர்
2004-2007 வரை யாழ்.மாவட்ட கல்விக்கழக பொறுப்பாளர் அத்துடன் யாழ்.மாவட்ட கல்வி மேம்பாட்டு பேரவை கண்காணிப்பாளர்.
2007-2009 வரை முல்லைத்தீவு மாவட்ட கல்விக்கழக பொறுப்பாளர் இப்பணி இடர்மிகு போர்க்கால கல்வி மேம்பாட்டுக்கான பணிகளாகும்.
10.10.2021 இல் ஆசிரிய சேவையிலிருந்து ஓய்வு.

**குடும்ப விபரம்**

திருமதி.சு.வாகேஸ்வரி (மனைவி)
திரு.சு.நித்திலன் (மகன்-கணனி விஞ்ஞான பட்டதாரி)
செல்வி.சு.நிலவழகி (மகள்- Junior Education consultant)
செல்வன்.சு.நிலவரசன்(மகன்-க.பொ.த.உ.தர மாணவன் கிளி/பளை மத்தியகல்லூரி)



### அதிபரின் ஆசிச்செய்தி

எமது பாடசாலையில் இறுதியாக ஆசிரியப் பணியை நிறைவு செய்து ஓய்வில் செல்லும் திரு. கந்தையா சுந்தரலிங்கம் சேர் அவரது பணி மிக மிகச் சிறப்பானது ஏனைய ஆசிரியர்களைப் போலல்லாது அவரது பணி கடந்த பல வருடங்களாக இருபத்து நான்கு மணி நேர சேவையாக இருந்தது எனக்கு நன்கு தெரியும். அவ்வாறே குறிப்பிட்ட பாடசாலை, சமூகம் என்றில்லாது கடந்த பல வருடங்கள் தமிழ்ப் பிரதேசங்கள் எல்லாவற்றிலும் அளப்பரிய சேவை செய்தவர் என்பது மிகையாகாது. எம் பிரதேசத்தில் போர் நடந்து கொண்டிருந்த காலத்திலே இப்போது இருக்கும் வசதி வாய்ப்புக்கள் எவையுமற்ற நேரத்தில் பாதுகாப்பற்ற கடல்பயணங்களைக் கடந்து தம் உயிரையும் பொருட்படுத்தாது ஆசிரிய சேவையே தனது முக்கிய, முதன்மையான சேவையென்றெண்ணி இரவு பகலாக உழைத்து தரமான கல்வியுடன் ஏனைய அதிபர், ஆசிரியர்களுக்கும் சிறந்த வழியாட்டியாக விளங்கினார் என்பது யதார்த்தமான உண்மையாகும்.

திருவாளர் கந்தையா சுந்தரலிங்கம் சேர் அவர்கள் தமது சேவையின் இறுதிக்காலங்களிலே "ஆசிரியர் விடுதலை முன்னணி" எனும் ஆசிரிய சங்கத்தில் வடக்கு மாகாணப் பிரதிநிதியாக இருந்து ஆசிரியர் பரம்பல், ஆசிரியர் நலன், ஆசிரியர் இடமாற்றம் போன்றவற்றில் நீதியாகவும் நியாயமாகவும் இருந்து தனது கருத்துக்களினால் ஆசிரிய சேவையின் நலனுக்காகப் பாடுபட்டவர் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

அவரது ஆசிரிய சேவையின் இறுதிக் காலங்களிலே அவருடன் இணைந்து சேவையாற்றும் சந்தர்ப்பம் எனக்குக் கிடைத்தது. கிளி/வேம்போடுகேணி சி.சி.த.க பாடசாலையிலே ஆசிரியராக, உதவி அதிபராகக் கடமையாற்றிய காலம் இப்பாடசாலையின் கல்வி வளர்ச்சிக்காக பல்வேறுபட்ட வழிகளிலே உதவியுள்ளார்.

சிறந்த சேவையாளன் திருவாளன் கந்தையா சுந்தரலிங்கம் அவர்கள் தமவு ஓய்வுக் காலத்தில் தமது குடும்பம், உறவுகள், சமூகத்துடன் இன்பமுடன் வாழ எல்லாம் வல்ல இறைவன் அருள் கிடைக்கப் பிரார்த்திக்கின்றேன்.

**திரு.வ.ஜீவரத்தினம்**
**அதிபர், கிளி/வேம்போடுகேணி சி.சி.த.க பாடசாலை.**



### வாழ்த்துச் செய்தி

கிளி/வேம்போடுகேணி சி.சி.த.க பாடசாலையினது பிரதி அதிபராகக் கடமையாற்றி ஓய்வுபெற்ற திரு. கந்தையா சுந்தரலிங்கம் அவர்களது பணியினைப் பாராட்டுவதில் மகிழ்வடைகின்றேன்.

மணிவிழாநாயகன் ஆசிரியராகக் கடமையாற்றிய காலத்தில் மாணவர்களினது கல்வி வளர்ச்சிக்கு ஆற்றிய பணிகள் அளப்பரியது. யாழ்ப்பாணம், முல்லைத்தீவு மாவட்ட மாணவர்களது கல்வி மேம்பாட்டிற்காக தனது மேலான பணிகளை ஆற்றி மாணவர்களது கல்வி வளர்ச்சிக்கு அரும்பணியாற்றியுள்ளார். இவர் ஆசிரியராகவும் பிரதி அதிபராகவும் மாணவர்களது கல்விக்காக ஆற்றிய பணிகளைப் பாராட்டுவதோடு ஓய்வுக் காலம் சிறக்கவும், தொடர்ந்தும் சமூகப் பணிகளில் ஈடுபடவும் வாழ்த்துகின்றேன்.

**செ.உதயகுமார்.**
**ஓய்வுநிலை மாகாணக் கல்விப் பணிப்பாளர்.**



### வாழ்த்துச் செய்தி

தமிழ்த் தேசத்தில் நடைமுறை அரசு கோலோச்சிய காலத்தில் கல்வித்துறை வளர்க்கும் பணியில் நெருக்கடிமிகுந்த காலத்தில் துணிச்சலுடன் கல்விச் சேவையாற்றியவர், ஆர்வலன், ஆசிரியர் வரலாற்றுச் சிறப்பு மிக்க இத்தாவில் மண்ணின் மைந்தர் திரு.கந்தையா சுந்தரலிங்கம் அவர்களது மணிவிழாவிற்கு வாழ்த்துக்கள் தெரிவிப்பதில் மட்டற்ற மகிழ்ச்சியடைகின்றேன்.

எனது நீண்டகால நண்பராகிய திரு.சுந்தரலிங்கம் அவர்கள் கடந்த இருபத்தைந்து ஆண்டுகளிற்கு மேலாக கல்வித்துறையின் வளர்ச் சிக்காக அர்ப்பணிப்புடன் சேவையாற்றியவர். மாணவச் செல்வங்களின் வாழ்வில் ஒளியூட்டும் ஆசிரியராக, அதிபராக பாடசாலைகளில் கடமையாற்றியதோடு தமிழிற்கும் தமிழ்மக்களிற்கும் அர்ப்பணிப்புடன் அளப்பரிய பலபணிகளை ஆற்றியவர். தமிழ்த் தேசத்தின் அங்கீகா ரத்திற்காக நீண்ட நெடிய தியாகம் நிறைந்த போராட்டம் நடைபெற்ற காலப்பகுதியில் தமிழ்த் தேசத்தின் மீது பொருளாதாரத் தடைகள் விதிக் கப்பட்டு கொடிய இனவழிப்பு யுத்தத்தை ஸ்ரீலங்கா அரசு முன்னெடுத்த காலப்பகுதியில் எமது தேசத்து மாணவர்கள் தடை யின்றிப் பாடசாலைக் கல்வியைப் பெறுவதற்கான பணிகளில் அன்றைய கால நடை முறையை அரசு முன்னெடுத்திருந்தபோது அதனுடன் இணைந்து கல்வித் துறையின் வளர்ச்சிக்கு அரும்பணியாற்றியவர்.

அண்ணன், அருமை நண்பர், சிறந்த ஆசான் அனைவராலும் அன்போடு ஆர்வலன் மாஸ்ரர் என்று அழைக்கப்பட்ட திரு.சுந்தர லிங்கம் அவர்களுக்கு அவரது மணிவிழாவில் வாழ்த்துக்களை தெரிவிப்பதில் மகிழ்வடைகின்றேன்.

**செல்வராசா கஜேந்திரன், பாராளுமன்ற உறுப்பினர்.**
**பொதுச் செயலாளர், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி**



### செயல்வீரனை வாழ்த்துகின்றோம்

மணிவிழா காணும் என் அன்பிற்கும் பாசத்திற்கும் உரிய அண்ணன் திரு.கந்தையா சுந்தரலிங்கம் அவர்களை பாராட்டி வாழ்த்துவதில் நாம் பெருமை கொள்கின்றோம். வயதிற்கு எடுக்கப்படும் விழாவாக அல்லாமல் அவரின் செயலுக்கு எடுக்கப்படும் விழாவாகவே நாம் இதை கருதுகின்றோம்.

போர் சூழ்ந்த இடர்மிகு பொழுதொன்றில், போரோடு ஏரும், அறிவும் தளர்வின்றி பயணிக்க வேண்டும் என (கரி)காலமிட்ட கட்டளையை சிரமேற்று கல்விக் கழகத்தின் தேரோட்டியாய் எறும்பின் சுறுசுறுப் புடனும் புலியின் விவேகத்துடனும் தாய் நாட்டின் கல்வி வளர்ச்சிக்காய் தாங்கள் செய்த பணியை இந்த மணிவிழா வாழ்த்தோடு சேர்த்து அழகுபார்ப்பதில் நாம் பெரு மகிழ்வடைகின்றோம்.

காலம் எவ்வளவோ இடர்களை தந்தபோதும் அத்தனை இடர்களையும் இல்லாள் திருமதி.வாகேஸ்வரி அவர்களின் உறு துணையுடன் வென்று காட்டி, இன்று தன்னை புடம்போட்ட அதே வேம்போடுகேணி பாடசாலையின் மாணவர்களை உரமேற்றி புடம்போட்ட உப அதிபராக ஒரு செயல் வீரனாக ஓய்வுபெற்ற மணிவிழா நாயகன் சுந்தரலிங்கம் அண்ணன் நீண்ட ஆயுளுடன் நோய் நொடியற வாழ்ந்து எம் மண்ணுக்கும் மக்களுக்கும் பயனுள்ள வழிகாட்டியாக திகழ வேண்டுமென மனமார வாழ்த்துகின்றோம்.

**பொன் சுதன்,**
**நிறுவனர் நிலம் நற்பணி இயக்கம்.**



### வாழ்த்துச்செய்தி

பொன் மலர்ந்த சுந்தர வதனச் சுந்தரலிங்கம்
அவதரித்த ஆண்டோ
ஆயிரத்துதொளாயிரத்து அறுபத்தொன்று
துள்ளித் திரிந்து சொல் கற்ற
கிளி/ வேம்போடுகோணி சி.சி.த.க கல்லூரி
இன்றும் உன் நினைவலையில் மிதந்து வரும்.
ஆறாம் ஆண்டினில் இணைந்தோம் பளை மகாவித்தியாலயத்தில்.
அன்று முதல் சேர்ந்திட்டோம் நண்பர்களாய்
பசுமைக் கனவுகளுடன் 83இல் உயர்தரம் கண்டோம்
84இல் பிரிந்தோம் கல்லூரி நட்பிலிருந்து.
நீரோ ஆண்டு 84 இல் தொண்டர் ஆசிரியரானீர்
பளை மகாவித்தியாலயத்தில்.
நானோ உயர்கல்வி தேடிச் சென்றேன் பல்கலைக்கு.
ஓர் தாய் வயிற்றில் பிறக்காவிடினும்
இன்றும் அன்பால் இணைந்தே உள்ளோம்.
அன்பு சொரிகின்ற முகம், ஆசைப் பேச்சு,
அடங்காத் தமிழ்ப்பற்று, விரிந்த சேவைமனப்பாங்கு
அத்தனையும் உன்னை உயர்த்தியே காட்டியது.
உனது சேவையும் எமது நட்பும்
என்றும் தொடர்ந்திடும் என்றே நம்புகிறேன்.

**கந்தையா தெய்வேந்திரம்,**
**செயலாளர்(ஓய்வு நிலை) நிதி திட்டமிடல் மற்றும்**
**உள்ளூராட்சி அமைச்சு, வடக்கு மாகாணம்.**

(19358)

**அனுசரணை**
**திரு.இராசையா இராசேந்திரம்(சுவிஸ்)**
**வாழ்த்துவோர்: நண்பர்கள் வட்டம்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அமெரிக்கா, தென்கொரியாவுக்கு பதிலடி கொடுப்போம்

### வடகொரியா எச்சரிக்கை

(பியாங்யாங்)

தென்கொரியாவும் அமெரிக்காவும் இணைந்து நடத்தும் இராணுவப் பயிற்சிகள் தமது நாட்டின் மீதான தாக்குதலுக்கான ஒத்திகை எனவும் அதற்கு தக்க பதிலடி கொடுக்கப்படும் எனவும் வடகொரிய பாதுகாப்பு அமைச்சு எச்சரித்துள்ளது.

தென்கொரியாவும் அமெரிக்காவும் 11 நாட்கள் நடைபெறும் இராணுவ ஒத்திகையை அண்மையில் ஆரம்பித்தன.

இந்த ஒத்திகையின் ஒரு பகுதியாக, இரு நாடுகளும் கடந்த ஆண்டை விட இரட்டை சூழ்ச்சிகளை மேற்கொள்ளவுள்ளன எனவும் வடகொரிய பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

இது முற்றிலும் பொறுப்பற்ற இராணுவ சூழ்ச்சிகள். தென்கொரியாவும் அமெரிக்காவும் இணைந்து இராணுவ பயிற்சி என்ற போர்வையில் இறையாண்மை கொண்ட வடகொரியா மீது படையெடுக்க முயல்கின்றன என வடகொரிய வெளிவிவகார அமைச்சர் தெரிவித்துள்ளார்.

அண்மைக்காலமாக வடகொரியா மற்றும் தென்கொரியா இடையில் பதற்றம் அதிகரித்து வருகிறமை குறிப்பிடத்தக்கது. (நி-5-6)

## சீனா - மாலைதீவு இடையே இராணுவ உதவி கைச்சாத்து

(மாலே)

சீனா-மாலைதீவு இடையே புதிய இரண்டு இராணுவ ஒப்பந்தம் கையெழுத்தாகியுள்ளது.

இந்தியாவுடன் மோதல் போக்கை கடைப்பிடித்து மாலைதீவு, சீனாவுடன் நெருக்கம் காட்டி வருகிறது. சமீபத்தில் மாலைதீவு ஜனாதிபதி முகமது முய்சு, சீனாவுக்கு பயணம் மேற்கொண்டு 20 இற்கும் மேற்பட்ட ஒப்பந்தங்களில் கையெழுத்திட்டார்.

இந்நிலையில் சீனா-மாலைதீவு இடையே புதிய இரண்டு இராணுவ ஒப்பந்தம் கையெழுத்தாகி உள்ளது. மாலைதீவு பாதுகாப்பு அமைச்சர் கசான் மவுமூன், சீன அரசின் சர்வதேச இராணுவ ஒத்துழைப்பு அலுவலக துணை இயக்குநர் மேஜர் ஜெனரல் ஜாங்பாகுன் ஆகியோர் ஒப்பந்தங்களை பரிமாறிகொண்டனர். இந்த ஒப்பந்தம் மூலம் மாலைதீவுக்கு இலவச இராணுவ உதவிகளை வழங்க சீனா உறுதியளித்துள்ளது. சமீபத்தில் சீனாவின் உளவுக்கப்பல் மாலைதீவில் நிலை நிறுத்தப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது. (நி-5-6)

## யுத்தத்தின் தீவிரத்

## பட்டினியால் இறப்

### உலக சுகாதார அ

(வோஷிங்டன்

இஸ்ரேல் - ஹ

குழந்தைகள் ப

எதிர்கொள்வத

விடுத்துள்ளது.

வடக்கு காசாவில் உள்ள இரண்டு மருத்துவமனைகள் உணவு, எரிபொருள் மற்றும் மருந்துகளின் கடுமையான பற்றாக்குறைக்கு மத்தியில் இருப்பதாக உலக சுகாதார அமைப்பின் அதிகாரிகள் தரப்பு காசாவில் உள்ள “அல்-அவ்தா” மற்றும் “கமல் அத்வான்” ஆகிய மருத்துவமனைகளை பார்வையிட்டுள்ள நிலையில், குறித்த எச்சரிக்கையை விடுத்துள்ளனர்.

மேலும் அல் அவ்தா மருத்துவமனையின் ஒரு பகுதி மொத்தமாக சேதமடைந்துள்ளதால் அங்குள்ள நிலைமை மிகவும் மோசமாக உள்ளது என்றும் உலக சுகாதார அமைப்பின் அதிகாரிகள் கவலை தெரிவித்துள்ளனர்.

அதுமட்டுமின்றி வடக்கு காசாவில் உள்ள ஒரே குழந்தைகள் மருத்துவமனையான கமல் அத்வான் மருத்துவமனை நோயாளிகளால் நிரம்பி வழியும் நிலையில் உள்ளது என தெரிவித்துள்ளனர்.

உணவு இல்லாத சூழலில் இதுவரை 10 குழந்தைகள் மருத்துவமனையில் மரணமடைந்துள்ளதாகவும் தெரிவித்துள்ளனர்.

இந்நிலையில் ஊட்டச்சத்து குறைபாடுகளால் 16 குழந்தைகள் இதுவரை மரணமடைந்துள்ளதாக தகவல் வெளியிடப்பட்டுள்ளது.

போரின் உக்கிரம் காரணமாக

## இந்தோனேசியாவில் உருவாக்கப்பட்டுள்ள முதல் இந்துப் பல்கலைக்கழகம்



(டென்பசார்)

இந்தோனேசியாவிலுள்ள பாலி தீவில் முதல் இந்துப் பல்கலைக்கழகம் உருவாக்கப்பட்டுள்ளது.

இந்தோனேசியாவானது மக்கள் தொகையில் உலகின் 7 ஆவது பெரிய நாடாக திகழ்வதோடு இங்கு 86% மேல் இஸ்லாமியர்கள் வாழ்கின்றனர்.

அதிக இஸ்லாமிய மக்கள் வாழும் நாடு என்ற பெருமையும் இந்தோனேசியாவுக்கு உள்ளது. இந்தோனேசியாவில் 17,000 இற்கும் அதிகமான தீவுகள் காணப்படுகிறது.

இதேவேளை, இந்தோனேசியாவிலுள்ள உலகளவில் சுற்றுலா மையமாக விளங்கும் பாலி தீவில் இந்துக்கள் அதிகம் வசிக்கின்றனர்.

இந்த பாலி தீவில் கடந்த 1993 ஆம் ஆண்டு இந்து மத ஆசிரியர்களால் கல்வி நிறுவனம் தொடங்கப்பட்டதை தொடர்ந்து கடந்த 1999 ஆம் ஆண்டு இந்து மத அரசு கல்லூரியாக தரம் உயர்த்தப்பட்டது.

பாலி தீவின் தலைநகர் டென்பசாரில் மிகச் சிறப்பாக செயற்பட்டு வந்த இந்தக் கல்லூரி கடந்த 2004 ஆம் ஆண்டு இந்து தர்ம அரசு நிறுவனமாக மீண்டும் தரம் உயர்த்தப்பட்டது.

இந்நிலையில், இந்நிறுவனத்துக்கு பல்கலைக்கழக அந்தஸ்து வழங்கும் ஆணையில் இந்தோனேசியா ஜனாதிபதி ஜோகோவி விடோடோ கையெழுத்திட்டுள்ளார்.

இதற்கமைய, ஜனாதிபதியின் ஒழுங்குமுறை அதிகாரத்தின் கீழ் இந்தோனேசியாவின் முதல் இந்துப் பல்கலைக்கழகம் உருவாக்கப்பட்டுள்ளது. புதிய இந்து பல்கலைக்கழகத்துக்கு “ஐ கஸ்தி பகஸ் சுக்ரிவா ஸ்டேட் இந்து யுனிவர்சிட்டி” என்று வைக்கப்பட்டுள்ளது.

இந்தப் பல்கலைக்கழகமானது இந்து உயர் கல்விக்கான அனைத்து அம்சங்களையும் உள்ளடக்கி செயற்படுகின்றது. (நி-5-6)

## ரோல்ஸ் ராய்ஸ் நி

## உலகில் மிக வி

(வோஷிங்டன்)


உலகிலேயே மிகவும் விலைமதிப்பான காரை ரோல்ஸ் ராய்ஸ் நிறுவனம் தயாரித்துள்ளது.

ஆர்கேடியா ட்ராப்டெய்ல் என பெயரிடப்பட்டுள்ள இந்த காரின் மொத்த மதிப்பு 31 மில்லியன் அமெரிக்க டொலர் என தெரிவிக்கப்படுகின்றது.

சர்வதேச அளவில் புகழ் பெற்றுள்ள ரோல்ஸ் ராய்ஸ் நிறுவனம் அறிமுகம் செய்துள்ள கார்களிலேயே இது தான் அதிக விலை கொண்ட கார் என கூறப்படுகின்றது.

கடந்த ஆண்டுதான் ரோல்ஸ் ராய்ஸ் நிறுவனம் அமெதிஸ்ட் மற்றும் லா ரோஸ் நோயர் என 2 விலை உயர்ந்த கார்களை அறிமுகம் செய்திருந்தது.

இந்நிலையில் அந்த 2 கார்களின் விலையை



பின்னுக்கு தள்ளும் வகையில் தற்போது ஆர்கேடியா ட்ராப்டெய்ல் கார் உள்ளது. ஆர்கேடியா என்பதற்கு பூமியின் சொர்க்கம் என்ற பொருள் உண்டு.

இந்த காரின் அறிமுக விழா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ...தால் குழந்தைகள் ...க்கும் அவலநிலை ...மைப்பு எச்சரிக்கை

(...ா)

## ...ஹமாஸ் யுத்தம் தீவிரமடைந்து வரும் நிலையில் ...பட்டினியால் இறக்கும் பயங்கரமான சூழலை ...தாக உலக சுகாதார அமைப்பு எச்சரிக்கை



காசா பகுதியில் பஞ்சம் தவிர்க்க முடியாத நிலையை இதுவரை 30,500 பாலஸ்தீன மக்கள் எட்டியுள்ளதாக ஐக்கிய நாடுகள் சபை கடந்த வாரம் எச்சரிக்கை விடுத்திருந்தது.

மேலும் ஒக்டோபர் 7 தாக்குதலுக்கு பின்னர் இஸ்ரேல் அளித்து வரும் பதிலடியால் இதுவரை 30 ஆயிரத்திற்கும் மேற்பட்ட பாலஸ்தீன மக்கள் கொல்லப்பட்டுள்ளனர்.

இதில் பெரும்பாலும் பெண்கள் மற்றும் குழந்தைகள் என்றே தகவல் வெளியாகியுள்ளது. (நி-5-6)

## அரிசியின் விலைக்கு எதிராக பிலிப்பைன்ஸில் போராட்டம்

(மணிலா)

பிலிப்பைன்ஸில் அரிசியின் விலை உயர்வுக்கு எதிர்ப்புத் தெரிவித்து பொது மக்கள் பாரிய போராட்டத்தை முன்னெடுத்துள்ளனர்.

பிலிப்பைன்ஸில் சமீபகாலமாக அத்தியாவசிய பொருட்களின் விலை வரலாறு காணாதவகையில் உச்சத்தைத் தொட்டு வருகின்றது.

குறிப்பாக கடந்த டிசெம்பருடன் ஒப்பிடுகையில் பணவீக்கமானது 22.6 சதவீதமாக அதிகரித்துள்ளது. இதனால் அரிசியின் விலை இதுவரை இல்லாத அளவு உச்சத்தை எட்டியுள்ளது. இந்நிலைக்கு கையிருப்பில் உள்ள அரிசியை அதிகாரிகள் சட்டவிரோதமாக விற்பனை செய்ததே காரணம் என குற்றம் சாட்டப்படுகின்றது.

இதற்கிடையே அரிசியின் விலையை குறைக்க கோரி பொதுமக்கள் பாரிய போராட்டத்தை முன்னெடுத்து வருகின்றனர்.

இப்போராட்டம் அந்நாட்டில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ள நிலையில் அரிசி விற்பனை ஊழல் தொடர்பாக தேசிய உணவு ஆணையத்தின் தலைவர், அதிகாரிகள் உட்பட 138 பேர் பணியிடை நீக்கம் செய்யப்பட்டுள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் இதுதொடர்பாக விரிவான விசாரணை நடத்தப்பட்டு வருவதாக விவசாயத் துறை அமைச்சர் பிரான்சிஸ்கோ டியு லாரல் தெரிவித்துள்ளார். (நி-5-6)

## ஈரானில் சக்திவாய்ந்த நிலநடுக்கம்

(டெஹ்ரான்)


ஈரான் நாட்டின் தெற்கு பகுதியில் சக்திவாய்ந்த நிலநடுக்கம் பதிவாகி உள்ளது.

நேற்று காலை 4.20 மணியளவில் இந்த நிலநடுக்கம் ஏற்பட்டுள்ளது.

நிலநடுக்கமானது ரிக்டர் அளவில் 5.5 ஆக பதிவாகியுள்ளதாக ஜேர்மனி புவி அறிவியல் ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

தெற்கு ஈரானில் 10 கிலோ மீற்றர் ஆழத்தை மையமாக கொண்டு இந் நிலநடுக்கம் ஏற்பட்டுள்ளது. (நி-5-6)

## ...றுவனம் தயாரித்த ...லமதிப்பான கார்




சிங்கப்பூரில் மிக பிரமாண்டமாக நடைபெற்றுள்ளது. உலகின் மிகச்சிறந்த மரத்துண்டுகள் இந்த காரின் பாகங்களில் பொருத்தப்பட்டுள்ளன.

ஆர்கேடியா ட்ராப்டெய்லின் காரின் நிறமானது வெளிப்புறமாக பார்க்கும்போது இந்த கார் வெள்ளை நிறத்தில் இருப்பதாக காட்சியளிக்கும். ஆனால் இந்த வண்ணங்களில் பல அடுக்குகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

வெள்ளை வண்ணத்துடன் அலுமினியம் மற்றும் உயர்தர கண்ணாடிகள் சேர்க்கப்பட்டு இந்த காரின் மேற்புறம் அமை க்கப்பட்டுள்ளது.

இந்த காரில் மொத்தமே 2 இருக்கைகள் கொண்டதாக உருவாக்கப்பட்டுள்ளதாக ரோல்ஸ் ராய்ஸ் நிறுவனம் தெரிவித்துள்ளது. மிகவும் விலை உயர்ந்த 233 மரத்துண்டுகள் இந்த காரில் பல இடங்களில் பொரு த்தப்பட்டுள்ளதால் தான் காரின் விலை அதிகமாக இருப்பதாக கூறப்படுகின்றது. (நி-5-6)

## இஸ்ரேல்-ஹமாஸ் போர் நிறுத்தத்திற்கு அவுஸ்திரேலியா, மலேசியா அழைப்பு



(காசா)

இஸ்ரேல் - ஹமாஸ் மோதல்கள் சர்வதேச மற்றும் பிராந்திய பொருளாதாரத்தில் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ள நிலையில் உடனடி யுத்த நிறுத்தத்திற்கு அவுஸ்திரேலியா மற்றும் மலேசியா அழைப்பு விடுத்துள்ளது.

பிராந்திய பதற்றங்களை தணிப்பதற்கான முயற்சிகளை மேற்கொண்டுள்ள நிலையில் இரு நாடுகளிடமிருந்தும் குறித்த அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

மெல்பேர்னில் இடம்பெறும் விசேட ஏசியான் மாநாட்டில் கலந்துகொண்ட அவுஸ்திரேலிய பிரதமர் அன்டனி அல்பெனிஸ் மற்றும் மலேசிய பிரதமர் அன்வர் இப்ராகீம் ஆகியோருக்கிடையில் இடம்பெற்ற சந்திப்பின் பின்னர் இந்த அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

மேலும் காசாவில் உள்ள அனைத்து பணயக்கைதிகளும் விடுதலை செய்யப்பட வேண்டும் எனவும் அவர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

இந்நிலையில் இஸ்ரேலிற்கும் பாலஸ்தீனத்திற்கும் இடையிலான சர்ச்சைக்குரிய விடயங்கள் குறித்து பேச விரும்பவில்லை மாறாக பொது உடன்பாடு காணப்படும் உடனடி யுத்த நிறுத்தம் குறித்து பேசவிரும்புகிறேன் என மலேசிய பிரதமர் அன்வர் இப்ராஹிம் தெரிவித்துள்ளார்.

இந்த மாநாட்டின் இறுதியில் காசா குறித்த அறிக்கையொன்றை வெளியிடுவதற்கான முயற்சிகள் இடம்பெறுகின்றன.

எனினும் மலேசியாவும் ஹமாஸ்ிம் கடுமையான நிலை ப்பாட்டை வலியுறுத்தியுள்ளன. எனினும் பிலிப்பைன்ஸ் மற்றும் அவுஸ்திரேலியா ஆகிய நாடுகள் வேறுபட்ட நிலைப்பாட்டைக் கொண்டுள்ளன.

இதேவேளை ஒக்டோபர் 7ஆம் திகதிக்கு பின்னர் காசாவில் காணப்படும் மோசமான மனிதாபிமான நிலை குறித்து அவுஸ்திரேலிய, மலேசிய பிரதமர்கள் கவலை வெளியிட்டுள்ளனர்.

இந்நிலையில் காசாவிற்கான பாதுகாப்பான தடையற்ற தொடர்ச்சியான மனிதாபிமான உதவிகளுக்கு அவர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (நி-5-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பூச்சிவேளாண்மை கருக்கொள்கின்றது நாமும் இதில் பயன்பெறலாம்!



பேராசிரியர் கு.மிகுந்தன்
விவசாய உயிரியல்துறை,

**வாருங்கள் எம் மினிய உறவுகளே!**

நம் நாடு மெல்ல மெல்ல பொருளாதார சிக்கலிலிருந்து மீள்வதற்கான பிரயத்தனங்கள் பலவற்றை முன்னெடுக்கின்ற போதிலும் உயர்வடைந்த பொருட்களின் விலைகள் கிஞ்சித்தும் தாமாக குறையும் சாத்தியக்கூறு தற்போதைக்கில்லை. மறுபக்கம் ஏறியிறங்கும் அமெரிக்க டொலரின் பெறுமதி எமது பொருளாதாரத்தில் பாதிப்பை ஏற்படுத்தியே செல்கின்றது. இவ்வேளையில் இவ்விடரில் சிக்கித் தவிக்கும் எமக்கு நமது உணவை குறிப்பிட்ட அளவில் நாமே உற்பத்தி செய்து இப் பேரிடரிலிருந்து எம்மையெல்லாம் காப்பாற்றிக் கொள்ள வழிகள் பலவுண்டு. எளிய பல தொழினுட்பங்களை நாம் பயன்படுத்தத் தொடங்கினால் அதனைநாம் விரைந்து செய்வது காலத்திற்கேற்ற கைங்கரியமாக இருக்கும்.

புரதச்சத்துக்கான முக்கியமான உணவாக கோழி முட்டை மற்றும் இறைச்சி என்பன இருக்கின்ற போதும் அவற்றின் விலைகள் எகிறிச் செல்கின்றதனால் கோழி வளர்ப்பாளர்கள் ஒரு வகையில் நன்மையடைந்தாலும் அதனை உணவாக கொள்பவர்களுக்கு விலையதிகரிப்பு மகிழ்வான செய்தியல்ல. இந்த விலையதிகரிப்புக்கு காரணமாக



கோழித் தீவனத்தை முதனைமப்படுத்தலாம். கோழித் தீவனத்தை எம் மூரிலேயே உற்பத்தி செய்வதற்கான வாய்ப்பினை மீளவும் தரும்படி எம்மினிய உறவுகள் கேட்டுக் கொண்டதற் கிணங்க சுருக்கமாக தரப்பட்டுள்ளது.

கோழித் தீவனத்தின் உற்பத்தியில் சற்றுகவனஞ் செலுத்தினால் முட்டையின் விலையை தளம் பலடையாது மக்கள் வாங்கி பயன்படுத்தும் குறைந்த விலைக்கு விற்கக் கூடிய வாய்ப்பு உண்டென்பதனை நாமெல்லோரும் உணரமுடியும். எமது உணவில் புரதச்சத்துடன் ஏனைய சத்துக்களை பெறக்கூடிய வாய்ப்புகோழி இறைச்சி மற்றும் முட்டையில் இருப்பதனால் அதனது கிடைக்கும் தன்மையை அதிகரிக்கவும் விலை குறைத்து அனைத்து மக்களும் வாங்கும் நிலைக்கும் அதனை கொண்டு வர வேண்டும்.

கோழித்தீவனத்திற்கு இருவகையான உணவினை நாம் உள்ளீடாக பயன்படுத்த முடியும். ஒன்று தானிய வகைகள். இன்னொன்று விலங்கு உணவுகள். எமது உணவுக்காகவும் கோழித் தீவனத்திற்கு தேவையான தானியங்களையும் பயிரிடாத நிலப் பரப்பில் பயிர்செய்வதை

## இனியொரு பசுமைப்புரட்சிக்கு...

ஊக்குவித்தல் சிறந்தது. அவ்வாறான பயிர்களில் உழுந்து, பயறு, கௌபி, பயற்றை, கொள்ளு, காட்டுக் கொள்ளு, சணல், குரக்கன், கம்பு, இறுங்கு, சோளம். என பலவகையான தானியப் பயிர்களை குறிப்பாக அவரைப் பயிர்களை விளைவித்து தேவையான தீவனத்தினை தயார் செய்து கொள்ளலாம்.

தீவனத்தின் மறு பகுதியாக கோழிக்குத் தேவையான புரதம் மற்றும் விற்றமின்களை வழங்குவதற்காக பூச்சி புழுக்களை உணவாக வழங்கலாம். பூச்சிகளை வளர்த்து அவற்றின் பயன்பாட்டை பெருக்குதலே பூச்சி வேளாண்மை எனப்படும். இங்கே புழுக்கள் என்பன எமது பிரதேசத்தில் இயற்கையாகவே காணப்படும் அழுகிய சேதனப் பொருட்களில் தானாகவே தொற்றுதலாகி வளரக் கூடிய கறுத்த வேலையாள் ஈ எனப்படும் ஒரு வகையான இலையானின் குறைப் பருவமாகும்.

இலையான் உருவத்தில் பெரிதாக காணப்படுவதனால் இதனை குளவி எனவும் பலர் தவறாக கருதுவதுண்டு. இதற்கு கொட்டும் உறுப்பு இல்லாத காரணத்தினால் மனிதனுக்கு எந்தவித தீங்கினையும் இந்த இலையான் ஏற்படுத்துவதில்லை. மேலும் இந்த இலையானின் இளம் பருவமான புழுப்பருவமே கோழிகளுக்கான சிறந்த தீவனமாக விளங்குகின்றது. முட்டையிடும் கோழிகள் மற்றும் இறைச்சிக்கான கோழிகளுக்கான உணவாக இந்த புழுக்களை அப்படியேயும் இன்னும் அரைத்து பவுடராக கோழியினது உணவில் கலந்தும் வழங்க முடியும். கொல்லைப் புற கோழி வளர்ப்புக்கு தனித்துவமான புழு கூடாரத்தினை உருவாக்கி தேவையான அளவு புழுக்களை அறுவடை செய்து கொள்ளலாம் அல்லது புழுக்களை கோழிகளுக்கு எளிய பொறிமுறை மூலம் கிடைக்கச் செய்யலாம். இதற்காக கொல்லைப் புற கறுத்த வேலையாள் ஈ வளர்ப்பு அலகினை ஏற்படுத்திக் கொள்ளலாம்.

கோழி உணவாக இந்த புழுக்களை நீங்களே உங்கள் வீடுகளிலேயே உற்பத்தி செய்து வழங்க முடியும். வீட்டுத்தோட்டத்தில் கோ்ழி வளர்ப்பில் ஈடுபடுபவர்களுக்கும் கோழிகளின் உணவாக இந்த புழுக்கள் சிறந்த தீனியாக அமையும். எமது வீடுகளில் உருவாகும் சேதன கழிவில் இலகுவாக வளர்க்கக் கூடிய இப் புழுக்களை வளர்த்து கோழிகளுக்கும் மீன் வளர்ப்பில் மீன்களுக்கும் சிறந்த புரதம் மற்றும் ஊட்டச்சத்து நிறைந்த உணவாக வழங்க முடியும். குறிப்பாக மரக்கறிக் கழிவுகள் இன்னும் பழங்களின் கழிவுகள் அதிலும் பலாச்சக்கை எனப்படும் பலாப்பழத்தில் சுளையை எடுத்தபின் மீதியாவதனை சக்கை என அழைப்பர் அதனை பயன்படுத்தி சிறப்பாக இந்தப் புழுக்களை வளர்க்க முடியும்.

சேதனக் கழிவுகள் அழுகலடையத் தொடங்கும் போது இந்த இலையான் தானாகவே வந்து முட்டையிடும் . எமது ஊரில் இவ்வாறான இலையான் அதிகமாகவே காணப்படும். முட்டைபொரித்து புழுக்கள் வெளிவந்து சேதனக் கழிவுகளில் வளரத் தொடங்கும். கோழிகளின் அளவுக்கேற்ப புழுக்களை உணவாக வழங்கலாம். தற்போதுள்ள விலை கூடிய தீவன நிலையில் இப் புழுக்களை வளர்த்து கோழி வளர்ப்பை தொடர்ந்து இலாப மூட்டும் தொழிலாக செய்ய முடியும்.

# இன்று ஒரு தகவல் 56



தென்கச்சி கோ.சுவாமிநாதன்

## உணவும் உறக்கமும்

சில விடயங்களைச் சொல்லும் போது...

இது விஞ்ஞானிகள் சொல்லியிருக்கிறார்கள் என்று சொல்லுவேன்.

அதுக்கு எல்லாம் நிரூபணம் உண்டு. அதாவது சோதனைச் சாலையிலே நிருபித்துக்காட்டி வெளிக்காட்டி இருக்கும் உண்மைகள்.

சில விடயங்களைச் சொல்லும் போது... இது மெய்ஞானிகள் சொல்லியிருக்கிறார்கள் என்று சொல்லுவேன். அந்த உண்மைகளுக்கெல்லாம் ஆராய்ச்சிச்சாலைகளும் நிரூபணங்களும் கிடையாது. அது எல்லாம் அனுபவத்தாலே கண்ட உண்மைகள்.

அதனாலே பெரியவர்கள் ஒன்றைச் சொன்னால் அதை நிரூபித்துக் காட்டினால் தான் நம்புவேன் என்று சொல்லக்கூடாது. பொய் சொல்லாதே என்று சொன்னால், சொன்னா என்ன என்று கேட்க கூடாது. இவ்வளவும் எதற்காக சொல்லிக்கொண்டு வாறேன் என்றால்.....

உணவு உண்பது எப்படி? தூங்குவது எப்படி? இதை பற்றியெல்லாம் நமது முன்னோர்கள் சில விடயங்களைச் சொல்லி வைத்து இருக்கிறார்கள். அதிலே கொஞ்சம் சொல்கிறேன். ஏன்? எப்படி? என்றெல்லாம் கேள்வி கேட்காது காதிலே வாங்கிக் கொள்ள வேண்டும். என்ன? சாப்பிடுவதற்கும் தூங்குவதற்கும் நமக்கு இன்னொருவர் சொல்லிக் கொடுக்க வேண்டிய அவசியம் இல்லை.இருந்தாலும் அவர்கள் என்ன சொல்லுகிறார்கள் என்று பார்க்கலாம்.

முதலில்... கை கால்களை கழுவிய பின்பு தான் சாப்பிடுவதற்கு உட்கார வேண்டுமாம்.சாப்பிடும் போது கோபம் வரகக்கூடாதாம். சாப்பிட்டுக்கொண்டு இருக்கும் போது தேவையில்லாமல் கதைக்கக் கூடாதாம். அவசரமாகவும் சாப்பிடக்கூடாதாம். எவ்வளவு தான் அவசரமாக இருந்தால் கூட நின்று கொண்டு சாப்பிடக்கூடாதாம். உட்கார்ந்து கொண்டு தான் சாப்பிட வேண்டும். பண்டிகை நாட்களிலே எல்லோரும் உட்கார்ந்து சாப்பிட வேண்டும். சாப்பிடுவதற்கு வாழையிலை தான் ரொம்ப நல்லதாம். வெள்ளிக்கிண்ணம் நல்லதாம். எல்லோருக்கும் கிடைக்கவேண்டுமே. புரச இலை -சீமைப்பூவரச இலை இவையெல்லாம் பரவாயில்லையாம் .தாமரை இலையைப் பின்பக்கம் சுத்தம் செய்து விட்டு சாப்பிடலாம். ஆல இலை நல்லதில்லையாம். வாழை மட்டையும் பரவாயில்லை! மண்சட்டியிலே சாப்பிட்டா உடம்புக்கு நல்ல குளிர்ச்சியாம்!

வெள்ளித் தாம்பாளத்திலே பால் சோறு சாப்பிட்டா உடம்பிலே உள்ள ரத்தம் சுத்தமாகும் என்று ஒரு தகவல். இதை நான் சொல்கிறபோது கிடைக்காததையெல்லாம் ஏன் சொல்லுகிறேன் என்று சொல்லி உடம்பில உள்ள ரத்தம் சூடாகும்! அதனாலே அதைப்பற்றி அதிகம் வேணாம்! இருந்தாலும் ஒரு தகவலா கேட்டு வைத்துக் கொள்ளுங்கோ என்ன தப்பு?

தங்க பாத்திரத்திலே சாப்பிடுவது ஆண்களுக்கு ரொம்ப நல்லதாம். (தாதுவிருத்தி மனசுக்கு சந்தோஷம் குடுக்குமாம். வாதநாடி பித்தநாடி இதையெல்லாம் சமநிலையில வைக்குமாம். இதனாலே நோய் வராது! இருக்கிற நோயும் குறையும்.

வெள்ளிப்பாத்திரம், வெண்கலப்பாத்திரம் இதெல்லாம் உடல் சோர்வை நீக்கும்! ரத்த, பித்தரோகம் எல்லாம் போக்கும். அலுமினியப் பாத்திரம் உடம்புக்கு நல்லதில்லையாம். இரவு சாப்பாடு எப்படி இருக்கவேண்டும் தெரியுமா? அதிக நேரம் கழித்து சாப்பிடக்கூடாது.

இரவிலே கீரை, நெல்லிக்காய், முள்ளங்கி இதெல்லாம் வேண்டாம் தயிர் வேண்டாம். இரவிலே பாற்சோறு நல்லது. பகலிலே அது வேண்டாமாம்! இரவு சாப்பாட்டிலே மிளகு, சீரகம், சேர்க்கிறது நல்லதாம். காலையிலே இஞ்சி மத்தியானம் சுக்கு இரவிலே கடுக்காய் மருந்துக்கும் சாப்பாட்டுக்கும் இது ரொம்ப பொருத்தம்!

சரி சாப்பிட்டாச்சு! இனிமேல் தூங்கிறது எப்படி?படுக்கையை நல்லா உதறிப் போட வேண்டும் முறைப்படி இடது பக்கம் படுத்து காலை நீட்டிக்கொண்டு தூங்குவது சிறப்பு. அது ஆயுளை அதிகப்படுத்துமாம்! வடக்கே தலை வைத்து படுக்கக்கூடாது. உத்த ரத்துக்கு அடியிலே படுக்கக்கூடாது.இலவம் பஞ்சு தலையணை நல்லது. மூளையைப் பாதுகாக்கும். பருத்திப்பஞ்சு– மன உளைச்சல், சலனம் இதை யெல்லாம் உண்டாக்குமாம். ரப்பர் தலையணை நல்லதில்லையாம்! சாப்பிடும் போது நடுவிலே தண்ணி குடிக்க வேண்டாம். தாகம், விக்கல் எடுத்தா சாப்பிடலாம். எந்த வகை பாத்திரத்திலே தண்ணி குடிக்கிறமோ அந்த பாத்திரத்துக்கு தகுந்தபடி தண்ணியோட குணம் மாறுமாம்.

என்னத்துக்கு இதையெல்லாம் போய் கஷ்டப்பட்டு சொல்லிக் கொண்டு இருக்கிறீர்கள் என்று கேட்காதீர்கள் . புகழையும் பணத்தையும் பதவியையும் எவ்வளவு சேர்த்தாலும் என்ன பிரயோஜனம்?

நிம்மதியா சாப்பிடணும்! நிம்மதியா தூங்கணும்! இது இல்லையென்றால் அது என்ன வாழ்க்கை! எங்க ஊரின் பக்கத்தில் ஒரு அம்மா! அதிகமாக படிக்காதவங்க!நன்றாக சமைப்பாங்க! வகை வகையா சமைச்சு வாழையிலையில் பரிமாறி வைத்துவிட்டு அவரது கணவரை சாப்பிடக் கூப்பிடுவார்! எப்படி தெரியுமா?

இதோ எடுத்து வைச்சிருக்கேன் வந்து கொட்டிக்க! அவரும் [illegible]ப்படாமல் வந்து கொட்டிக்கிட்டு போயிடுவார்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேக்குமரங்களை வெட்டி கொண்டு சென்ற விஷமிகள்




(மன்னார்)

மன்னார் மடுவில் வீதியோரம் இருந்த வளர்ந்த தேக்கு மரங்களை இனந்தெரியாத நபர்கள் வெட்டி குற்றிகளாக ஏற்றிச் சென்றுள்ளனர்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை நள்ளிரவு மடு தேவாலயம் - மடு ரோட் சந்தி வீதிக்கு இடைப்பட்ட பகுதியில் உள்ள தேக்கு மரங்களை மர்ம நபர்கள் வெட்டி வாகனத்தில் ஏற்றி சென்றுள்ளதாக தெரிய வருகின்றது.

இந்நிலையில் வெட்டப்பட்ட மரக் குற்றிகளின் கிளைகள் வீதியிலேயே போடப்பட்டு இருந்தமையால் நேற்று முன்தினம் காலை குறித்த வீதியில் வாகனங்கள் பயணிக்க முடியாமல் போக்குவரத்து தடைப்பட்டு இருந்தது. (நி-5-6-285)

# காணிகளை விடுவிக்ககோரி தபாலட்டைகள் அனுப்பி வைப்பு



(கண்டாவளை)

கிளிநொச்சி பூநகரி பிரதேசத்திற்குட்பட்ட ஜெயபுரத்தில் எமது நிலத்தை எம்மிடம் மீள ஒப்படையுங்கள் எனும் கருப்பொருளின் கீழ் நிலத்தை இழந்த மக்களின் குரல் என்ற அமைப்பின் ஊடாக வட மாகாணத்தில் படையினர் மற்றும் ஏனைய திணைக்களங்கள் வசமுள்ள பொது மக்களின் காணிகளை விடுவிக்கக்கோரி தபால் மூலம் ஜனாதிபதிக்கு அழுத்தத்தை கொடுக்கும் நிகழ்வு நேற்று இடம்பெற்றது.

குறித்த நிகழ்வில் காணிகள் தொடர்பான தெளிவூட்டல்கள் வழங்கி வைக்கப்பட்டதுடன் நிகழ்வு நிறைவடைந்த பின்னர் ஜெயபுரம் தபாலகத்தில் இருந்து ஜனாதிபதி அலுவலகத்திற்கு காணி விடுவிப்பு தொடர்பான தபாலட்டைகள் அனுப்பி வைக்கப்பட்டன.

இந்நிகழ்வில் மாவட்டத்தின் பூநகரி பிரதேசத்தை சேர்ந்த நூற்றுக்கும் மேற்பட்ட பாதிக்கப்பட்டவர்கள் வருகை தந்திருந்தமையும் குறிப்பிடத்தக்கது. (நி-5-6-100-315)

# வெள்ளை ஈ நோய்த்தாக்கம் தொடர்பில் விழிப்புணர்வு



(தருமபுரம்)

கிளிநொச்சி மாவட்டத்தில் வெள்ளை ஈ சம்பந்தமான விழிப்புணர்வு கலந்துரையாடல் ஒன்று நேற்று அம்பாள் குளம் பகுதியில் வடமாகாண தென்னை பயிர்ச்செய்கையின் பிராந்திய முகாமையாளர் தேவராஜா வைகுந்தன் தலைமையில் இடம்பெற்றது.

குறித்த விழிப்புணர்வு கலந்துரையாடலில் தென்னை பயிர்செய்கையாளர்கள் கலந்து கொண்டிருந்தனர்.

கலந்துரையாடலின் பின் பாதிப்புக்குள்ளான தென்னை மரங்களுக்கு உத்தியோகத்தர்களால் மருந்தும் தெளித்து விழிப்பூட்டல் செய்யப்பட்டது.(நி-5-6-316)

# மாந்தை கிழக்கிற்கு பேருந்து சேவையை ஏற்படுத்தி தாருங்கள்

(அக்கராயன்)

முல்லைத்தீவு மாந்தை கிழக்கு பிரதேசத்திற்கு கிளிநொச்சியில் இருந்து இலங்கை போக்குவரத்து சபையின் பேருந்து சேவையினை மீண்டும் ஆரம்பிக்குமாறு அப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.


மாந்தை கிழக்கு பகுதிகளுக்கு 1990 ஆம் ஆண்டிற்கு முன்னர் பேருந்து சேவை கிளிநொச்சி பேருந்து நிலையத்தில் இருந்து நடைபெற்றது. காலை 6 மணிக்கு பனங்காமம், நட்டாங்கண்டல், பாண்டியன்குளம், செல்வபுரம், சிவபுரம், பாலிநகர், கொல்லவிளாங்குளம், அம்பாள்புரம், வன்னிவிளாங்குளம், மாங்குளம் ஊடாக யாழ். வரை இடம்பெற்றது.

கிளிநொச்சியில் இருந்து இலங்கை போக்குவரத்து சபையின் பேருந்து ஒன்றினை இரவில் பனங்காமத்தில் தரித்து நின்று காலையில் யாழ்ப்பாணம் சென்று திரும்பி வருவதற்கான சேவையினை ஆரம்பிப்பதற்கு துறைசார் அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என மாந்தை கிழக்கு மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (நி-5-6-350)

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கிளிநொச்சி | நெல்லியடி |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 150 | 160 | 130 | 250 | 220 |
| உருளைக்கிழங்கு | 150 | 180 | 160 | 200 | 160 |
| பச்சைமிளகாய் | 350 | 350 | 300 | 400 | 300 |
| தக்காளி | 250 | 300 | 250 | 350 | 250 |
| மரவள்ளிக்கிழங்கு | 120 | 130 | 100 | 200 | 130 |
| கோவா | 400 | 330 | 350 | 400 | 350 |
| கரட் | 350 | 450 | 400 | 450 | 500 |
| பூசணி | 250 | 250 | 130 | 250 | 160 |
| புடோல் | 180 | 160 | 120 | 200 | 145 |
| வாழைக்காய் | 200 | 180 | 120 | 200 | 150 |
| சின்ன வெங்காயம் | 250 | 250 | 200 | 300 | 320 |
| பெரிய வெங்காயம் | 400 | 350 | 340 | 400 | 350 |
| பாகற்காய் | 400 | 400 | 300 | 400 | 405 |
| வெண்டக்காய் | 250 | 250 | 200 | 400 | 180 |
| கருணைக் கிழங்கு | 120 | 120 | 100 | 150 | 100 |
| பயற்றங்காய் | 250 | 250 | 150 | 300 | 370 |
| லீக்ஸ் | 360 | 300 | 280 | 350 | 300 |
| பீற்றூட் | 350 | 300 | 300 | 400 | 300 |
| கறிமிளகாய் | 400 | 500 | 320 | 400 | 350 |
| முருங்கைக்காய் | 1200 | 1300 | 600 | 1200 | 1520 |
| போஞ்சி | 400 | 250 | 300 | 400 | 330 |
| கத்தரிதம்புள்ள | 150 | 100 | 80 | 200 | - |
| கீரை – 1 பிடி | 80 | 100 | 40 | 100 | 50 |
| தேசிக்காய் | 150 | 200 | 140 | 200 | 100 |
| தேங்காய் (ஒன்று) | 100 | 110 | 110 | 70-100 | 40-100 |
| இராசவள்ளி | 350 | 400 | 300 | 300 | 400 |
| வெங்காயப்பூ | 120 | 200 | 150 | 250 | 80 |
| முள்ளங்கி | 80 | 100 | 100 | 200 | 100 |
| பொன்னாங்காணி | 100 | 100 | 120 | 60 | 120 |
| வல்லாரை | 60 | 50 | 50 | 80 | 80 |
| [illegible] | 100 | 150 | 100 | 200 | 100 |


# கண்ணீர் அஞ்சலி



எமது பாடசாலை ஆசிரியர் திரு.பா.செந்தில்குமார் அவர்களின் அன்புத் தந்தை

அமரர். இராசையா பாலேந்திரன்

அவர்கள் காலமான செய்தியறிந்து துயரடைகின்றோம். அன்னாரின் இழப்பினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி சாந்தி சாந்தி

தோற்றம்: 17.08.1946
மறைவு: 03.03.2024

ஆசிரியர் நலன்புரிக்கழகம்,
யா/பெரியபு[illegible]

(19364)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்கியின் பாகம் - 2

# பொன்னியின் செல்வன்

காவியத் தொடர் 424





பழுவேட்டரையர்களையும், சம்புவரையர்களையும் பூண்டோடு அழிப்போம். சிவபக்தி வேஷதாரியான மதுராந்தகனைச் சிவலோகத்துக்கே அனுப்பி வைப்போம்.

பிறகு தாங்களும் தங்கள் தமையனாரும் யோசித்து உசிதம்போல் முடிவு செய்யுங்கள்!" என்றான் பார்த்திபேந்திரன்.

"ஐயா! எல்லாம் நாமே முடிவு செய்ய வேண்டியதுதானா? என் தந்தை சக்கரவர்த்தி அவருடைய விருப்பம் இன்னதென்று நாம் தெரிந்துகொள்ள வேண்டாமா? ஒரு வேளை தாங்கள் தெரிந்துகொண்டிருக்கிறீர்களா? என் தமையனாருக்குத் தந்தையிடமிருந்து ஏதேனும் அந்தரங்கச் செய்தி வந்ததா?"

"இளவரசே! இந்தச் சந்தர்ப்பத்தில் உண்மையைச் சொல்ல வேண்டியது அவசியம். மூடி மறைப்பதில் பயனில்லை. தங்கள் தந்தையின் விருப்பத்தை இச்சமயம் அறிந்து கொள்வது இயலாத காரியம். சக்கரவர்த்தி இப்போது சுதந்திர புருஷராயில்லை. பழுவேட்டரையர்களின் சிறையில் இருக்கிறார். அவர்களுடைய அனுமதியின்றி யாரும் சக்கரவர்த்தியைப் பார்க்க முடியாது பேசவும் முடியாது. அவருடைய விருப்பத்தைத் தெரிந்து கொள்வது எங்ஙனம்? தந்தையைக் காஞ்சிக்கு வரச் சொல்வதற்காகத் தங்கள் தமையனார் பெரு முயற்சி செய்தார். காஞ்சியில் பொன் மாளிகை கட்டினார். சக்கரவர்த்தி விஜயம் செய்து கிரஹப்பிரவேசம் செய்யவேண்டும் என்று அழைப்பு அனுப்பினார். ஆனால் சக்கரவர்த்தியிடமிருந்து மறு ஓலை வரவில்லை"

"என் தந்தை நோய்ப்பட்டிருப்பது நடக்க முடியாதவராயிருப்பதும் தெரிந்த விஷயந்தானே?"

"இளவரசே! தங்கள் தந்தை மூன்று உலகங்களின் சக்கரவர்த்தி காஞ்சிக்குக் காலால் நடந்து வரவேண்டுமா? யானைகள் குதிரைகள் இல்லையா? வண்டி வாகனங்கள் இல்லையா? தங்க ரதங்களும் முத்துச் சிவிகைகளும் இல்லையா? தலையால் சுமந்து கொண்டு வருவதற்கு முடிசூடிய சிற்றரசர்கள் ஆயிரம் பதினாயிரம் பேர் போட்டி போட்டுக் கொண்டு வர மாட்டார்களா? காரணம் அதுவன்று பழுவேட்டரையர்களின் துரோகந்தான் காரணம். தஞ்சை அரண்மனை இப்போது சக்கரவர்த்தியின் சிறையாக மாறிவிட்டது. இளவரசே! தங்கள் தந்தையின் உயிரைக் காப்பாற்ற விரும்பினால் உடனே புறப்பட்டு வாருங்கள்!"

இந்த வார்த்தைகள் இளவரசரின் உள்ளத்தைக் கலக்கி விட்டன என்பது நன்றாகத் தெரிந்தது. அவருடைய களை பொருந்திய முகத்தில் முதன் முதலாகக் கவலைக் குறி தென்பட்டது.

இளவரசர் சிறிது நேரம் சிந்தனையில் ஆழ்ந்திருந்து விட்டுச் சேனாதிபதியின் முகத்தை ஏறிட்டுப் பார்த்தார்.

"தளபதி! தங்களுடைய யோசனை என்ன? சில நாளைக்கு முன்பு முதன் மந்திரி அநிருத்தப் பிரமராயர் வந்திருந்தார். அவர் என் தந்தையின் மதிப்புக்கும் அந்தரங்க அபிமானத்துக்கும் உரியவர். அவர் என்னை இலங்கையிலேயே சில காலம் இருக்கும்படி யோசனை சொன்னார். தாங்களும் அதை ஆமோதித்தீர்கள். 'இங்கே சண்டை ஒன்றும் நடக்கவில்லையே, நான் எதற்கு இருக்க வேண்டும்?' என்று கேட்டதற்குச் சமாதானம் சொன்னீர்கள். முதன் மந்திரி இதோ நிற்கும் வைஷ்ணவரிடம் அதே யோசனையைத் திரும்பச் சொல்லி அனுப்பியிருக்கிறார். என் தமக்கை இளைய பிராட்டியிடம் எனக்கு எவ்வளவு மதிப்பு உண்டு என்பது தங்களுக்குத் தெரியும். அவர் இட்ட கோட்டை நான் தாண்ட மாட்டேன். இலங்கைக்கு அவர் வரச் சொல்லித்தான் வந்தேன். இளைய பிராட்டி இதோ இந்த வாணர்குலத்து வீரனிடம் ஓலை அனுப்பியிருக்கிறார். ஒரு விதத்தில் என் தமக்கையின் செய்தியும் பார்த்திபேந்திரர் கூறியதை ஒட்டியிருந்தது.

(தொடரும்...)



# சிறுவர் அரங்கம்

## உப்பில்லாப் பண்டம் குப்பையில்



வணக்கம் குட்டீஸ் எப்படி இருக்கீங்க!

நீங்க சாப்பிடுற உணவில உப்பு இல்லைனா நீங்க என்ன செய்வீர்கள். ஒருநாள்இந்த உலகில் உப்பு தீர்ந்து போனால் அதற்கு பதில் வேறு ஏதும் இருக்கிறதா என்று யோசித்திருக்கிறீர்களா.

ஒரு ராஜ்ஜியத்தில் ஒரு அரசர் அமைதியான ஆட்சி செய்து வந்தார். அவருக்கு 3 மகள்'கள் இருந்தார்கள். 3 பேருமே அழகில் அறிவில் சிறந்தவர்கள். ஒரு நாள்அரசரின் பிறந்த நாள் வந்தது. ராஜ்யத் தில் அனைவரும் அரசருக்கு பொன் பொருள் என பலவித பரிசுகளை கொடுத்தார்கள்.

அவரது 3 மகள்களும் அரசருக்கு பரிசுகளை கொண்டு வந்தார்கள்.என்ன கொடுப்பார்கள் என மக்கள் எதிர்பார்த்த நிலையில் முதல் மகள் தங்கத் தால் ஆன ஒரு கட்டியை கொண்டு வந்து பரிசாக கொடுத்தார். அதை வாங்கி கொண்ட அரசர் மகளை நெற்றியில் முத்தமிட்டு நன்றியை கூறினார். மக்களும் ஆனந்தத்தில் திளைத்தார்கள்.

அரசரின் 2ஆவது மகள் அரசவைக்கு வந்தார். அவரின் பரிசை ஆவலோடு எதிர்பார்த்த மக்கள் அவரின் பரிசை திறந்து காண்பித்ததும் முகமெல்லாம்மகிழ்ச்சியில் ஜொலித்தது. அரசரும் மகளை இறுக்க கட்டி அணைத்து நன்றி தெரிவித்தார். அவர் கொண்டு வந்தது வெள்ளியால் ஆன கட்டி.

இப்போது 3ஆவது மகளின் என்ட்ரி. மொத்த ராஜ்ஜியமும் அவளை கண்இமைக்காமல் பார்த்தார்கள். அவள் கொண்டு வந்த தட்டு கொஞ்சம் முக்கோண வடிவில் உயரமாக தெரிந்தது. அவள் அரசரை நெருங்கி வந்தாள் அரசரை நெருங்கி வந்தும் இளவரசி தனது பரிசை மூடி இருந்த துணியை விலக்கினார். அதை திறந்தும் அனைவரின் முகமும் தொங்கியது. அரசருக்கு முகம் வெளுத்து போய் கோபம் கொந்தளித்தது.என்ன இது என்று கேட்க

இளவரசி அது உப்பு தந்தையே என்றாள்.அது தெரிகிறது. ஆனால் இதை தான் உன் தந்தைக்காக நீ பரிசாக அளிப்பாயா? உனக்கு பரிசாக கொடுக்க வேறு எதுமே கிடைக்கவில்லையா என்றார். அவள் இதன் அருமை உங்களுக்கு புரியவில்லைஅப்பா என்றாள்.

அரசர் எங்கும் கிடைக்கும் இந்த பொருளை பரிசாக அளித்த நீ ராஜ்ஜியத்தைவிட்டு முதலில் வெளியேறு என்று கோபமாக ஆணையிட்டார். அவளும் சிரித்து கொண்டே அங்கிருந்து புறப்பட்டு சென்றாள்.

சிறிது நாட்கள் கடந்தன. ராஜ்ஜியத்தில் உப்பின் விளைச்சல் இல்லாமலே போனது. எங்கு அலைந்தும் ராஜ்ஜியத்திற்கு உப்பு மட்டும் கிடைக்கவில்லை.

அவர் உண்ணும் உணவும் இப்போது உப்பில்லாமல் போக அவரால் எந்த உணவையும் உண்ண முடியவில்லை. அவர் மட்டுமில்லை ராஜ்யத்தில் இருந்த மக்களுமே உப்பில்லாமல் உணவை உண்ண கஷ்டப்பட்டார்கள்.

மக்கள் வாழ்வதற்கு ஆதாயமாக இருப்பதே உணவுதான் அதை உண்ண முடியாமல் தவித்தார்கள். அரசருக்கு அப்போதுதான் புரிந்தது. தங்கம், வெள்ளியை விட சிறந்த பரிசு உப்பு தான் என்று. தன் மகளின் பரிசை உதாசீனப்படுத்தியதால் தனது ராஜ்யமே வாழ தகுதியற்றதாக மாறியதை எண்ணி வருந்தினார்.

மகளை மீண்டும் ராஜ்ஜியத்திற்கு வரவழைக்க முடிவெடுத்தார். இளவரசியும்தனது தந்தைக்காக வைத்திருந்த பரிசை கொண்டு வந்தார். அந்த உப்பை விலையுயர்ந்த பரிசாக உணர்ந்த அரசர் தலைகுனிந்து ஏற்று கொண்டார்.

மீண்டும் ராஜ்ஜியத்தில் உப்பு விளைச்சல் தொடங்கியது. தங்கம், வெள்ளி இதையெல்லாம் தாண்டி நமக்கு வாழ தேவையான உயர்ந்த பொருட்கள் இருக்கின்றன என்பதை இளவரசி அரசருக்கு மட்டுமில்லாமல் ராஜ்ஜியத்திற்கும் உணர்த்தினார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வுலகை சிறப்பானதாக மாற்றுவதில் நாம் ஒவ்வொருவரும் முக்கிய அங்கம் வகிக்கின்றோம்.
– அறிஞர்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## எம் பிள்ளைகளின் சாதனைகளை உலகறியச் செய்வோம்!

உன் புகழை மற்றவர்கள் போற்றுவார்கள் எனக் காத்திராதே. உன் புகழை நீயே உரக்கச் சொல் என்றார் யூலியஸ் சீசர்.

இவ்வாறு யூலியஸ் சீசர் கருத்துரைப்பதற்குக் காரணம் ஒருவரின் சாதனையை – அவரின் ஆற்றலை – திறமையை மற்றவர்கள் போற்றவும் பாராட்டவும் வேண்டும் என்பதுதான்.

அவ்வாறு செய்வதன் மூலமே சாதனைகள் மென்மேலும் படைக்கப்படும் என்பது யூலியஸ் சீசரின் தீர்மானமாக இருந்தது.

சிலவேளைகளில் சாதனைகளை – ஆற்றல்களை மற்றவர்கள் கண்டுகொள்ளாமல் விடுவார்களாயின் அதனால் சாதனை படைத்தவர்கள், சாதனை படைக்க முயற்சிப்பவர்கள் மனம் சோரவோ அல்லது தங்களின் ஆர்வத்தை தளர்த்தவோ கூடாது.

மாறாக அவர்கள் தங்களின் புகழை உரக்கக்கூறிக் கொள்ள வேண்டும். அப்போது தான் இந்த உலகில் சாதனைகள் பிறக்கும்.

ஆம், யூலியஸ் சீசர் கூறிய கருத்து நம் மண்ணுக்கு நிச்சயம் பொருந்தும்.

பொதுவில் மற்றவர்களின் சாதனைகளைப் பாராட்டுவதில் – அதனை விளம்பரப்படுத்துவதில் நாங்கள் பின்னடைவாகவே இருக்கிறோம்.

இதை நாம் கூறும்போது கில்மிஷாவின் சாதனையை நாங்கள் பாராட்டவில்லையா?, கௌரவிக்கவில்லையா? என்று நீங்கள் யாரேனும் கேட்கலாம்.

உண்மை. தமிழகத்தின் தொலைக்காட்சியில் மிகச் சிறப்பாகப் பாடல்களைப் பாடி முதலிடத்தைப் பெற்றுக் கொண்ட கில்மிஷாவை நாங்கள் மிகச் சிறப்பாகப் பாராட்டினோம் என்பது நிராகரிக்க முடியாத உண்மை.

அதேநேரம் அந்தப் பாராட்டுக்கு எங்களின் இசை இரசனையும் சினிமாப் பாடல்கள் மீது நாம் கொண்ட ஈடுபாடும் பின்னணியாக இருந்தது என்பதை இங்கு கூறித்தானாக வேண்டும்.

அதாவது இசை மீது நாம் கொண்ட இரசனை அந்த நிகழ்ச்சியைப் பார்க்கவும் அதன் அடிப்படையில் கில்மிஷாவை பாராட்டவும் தூண்டியது.

ஆனால் அண்மையில் யாழ்ப்பாணத்தைப் பூர்வீகமாகவும் திருகோணமலை இந்துக் கல்லூரியின் மாணவனுமாகிய 13 வயதேயான ஹரிஹரன் தனவந் பாக்கு நீரிணையை நீந்திக் கடந்து சாதனை படைத்தது எத்தனை பேருக்குத் தெரியும் என்பதுதான் நம் கேள்வி.

ஆம், ஒரு காலத்தில் பாக்குநீரிணையைக் கடந்த ஆழிக்குமரன் ஆனந்தனை, நவரத்தினசாமியை இன்றும் நாம் போற்றுகின்றோம்.

ஆழிக்குமரன் ஆனந்தன் என்றதும் அவரின் சாதனையை எவரும் உச்சரிப்பர்.

ஆனால் அதே சாதனையை 13 வயது மாணவன் நிகழ்த்தியுள்ளபோதிலும் அது தொடர்பில் நாம் மௌனமாக இருப்பதுதான் புரியவில்லை.

இங்குதான் நம் முன்னவர்கள் சாதனைகளைப் பாராட்டினர். கௌரவித்தனர். அந்தச் சாதனையை உலகறியச் செய்தனர். அதன் விளைவாக ஆழிக்குமரன் ஆனந்தன், நவரத்தினசாமி ஆகியோரின் பெயர் நிலைத்து நிற்கிறது.

ஆனால் சமகாலத்தில் நாம் எமது இரசனையுடன் தொடர்புபட்ட விடயத்தில் மட்டும் கவனம் செலுத்துகின்றோமே தவிர, சாதனைகளைப் பற்றிச் சிந்திக்கத் தவறிவிட்டோம். அதன் விளைவுதான் மாணவன் தனவந்தின் சாதனையை நாம் பெருமெடுப்பில் பறைசாற்றவில்லை.

எனவே இந்தக் குறைபாட்டை நிவர்த்தி செய்து எங்கள் பிள்ளைகள் படைக்கின்ற சாதனைகளை உலகறியச் செய்வது எங்களின் தலையாய கடமையாகும்.

# நாட்டில் புதிய புரட்சி எனகூறி பயங்கரவாதம் தோற்றுவிக்கப்பட்டது

## எதிர்க் கட்சித் தலைவர் சஜித்

நாட்டில் புதிய புரட்சியொன்றை செய்யப் போவதாகக் கூறிய தரப்பினரால் நாட்டில் பயங்கரவாதமே தோற்றுவிக்கப்பட்டதாக எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச குற்றம் சாட்டியுள்ளார்.

மொனராகல மாவட்டத்தில் இடம்பெற்ற பிரபஞ்சம் தகவல் தொழிநுட்ப வேலைத் திட்டத்தின் 119 ஆவது நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில் "கடந்த காலத்தில் பயங்கரவாதத்தால் இந்நாட்டில் பல உயிர்கள் பலியாகின. வடக்கை போலவே தெற்கிலும் பயங்கரவாதம் ஆட்கொண்டிருந்தது. நாட்டில் மீண்டும் இவ்வாறான அவலங்கள் உருவாக இடமளிக்கக்கூடாது.

ஒட்டுமொத்த நாடாக நாம் 90 பில்லியன் அமெரிக்க டொலர் கடன்பட்டுள்ளோம். 2019 ஆம் ஆண்டு செய்த தவறை மீண்டும் செய்யாதிருப்போம்.

இந்த அரசாங்கம் எடுத்த முட்டாள்தனமான முடிவுகளால் நாடு நாசமடைந்தது.

மீண்டும் இவ்வாறான தொரு நாசகாரம் நடந்தால் நாட்டுக்கு என்னவாகும் என்பதை நினைத்துப் பார்க்க முடியாது இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச குற்றம் சாட்டியுள்ளார். (ம-7,10)

### யாழ். முற்றவெளியில்

## விமானப்படையின் கண்காட்சி இன்று ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

இலங்கை விமானப்படையின் 73 ஆவது ஆண்டை முன்னிட்டு யாழ்ப்பாணத்தில் விமானப்படையின் கல்வி மற்றும் தொழிநுட்ப கண்காட்சி யாழ்.முற்றவெளி மைதானத்தில் இன்று ஆரம்பமாகவுள்ளது.

மேலும் குறித்த கண்காட்சியானது எதிர்வரும் 10 ஆம் திகதி வரை நடைபெறுமெனவும் இதன் போது விமானப் படையின் சாகச நிகழ்வுகள் மற்றும் கலை நிகழ்ச்சிகள் என்பன நடத்தத் திட்டமிடப்பட்டிருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை இக் கண்காட்சியினைப் பாடசாலை மாணவர்கள் இலவசமாகப் பார்வையிட முடியும் எனவும் ஏனையோருக்கு நுழைவுக் கட்டணமாக 100 ரூபாயை அறவிடத் தீர்மானித்திருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அது மட்டுமல்லாது இக் கண்காட்சியின் முடிவில், ஜெட் விமான இயந்திரமொன்றை விமான படையினர் யாழ். பல்கலை கழகத்திற்கு அன்பளிப்பு செய்யவுள்ளனர் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.(ம-7,10)

## காணி முகாமைத்துவ நிதியத்தை ஸ்தாபிக்க அமைச்சரவை அனுமதி

முதலீட்டு நோக்கங்களுக்காக அரச மற்றும் நியதிச் சட்ட நிறுவனங்களுக்கு சொந்தமான காணிகளை முறையாக விடுவிப்பதற்காக காணி முகாமைத்துவ பொறுப்பு நிதியத்தை ஸ்தாபிப்பதற்கு அமைச்சரவை அனுமதியளித்துள்ளது.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவினால் இது தொடர்பான அமைச்சரவைப் பத்திரம் முன்வைக்கப்பட்டதாக அமைச்சரவைப் பேச்சாளரும் அமைச்சருமான பந்துல குணவர்தன தெரிவித்துள்ளார்.

நாட்டின் மொத்த நிலப்பரப்பில் 82 சதவீதம் அரசுக்கு சொந்தமானதாக காணப்படுவதுடன், அதன் பாதுகாப்பு மற்றும் நிர்வாகம் என்பன வெவ்வேறு நிறுவனங்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

அதற்கமைய, புதிய முதலீடுகளின் போது, முதலீட்டாளர்களுக்கு பொருத்தமாக காணியை அடையாளம் கண்டு, அவற்றை விடுவிப்பதற்கு காணி முகாமைத்துவ பொறுப்பு நிதியம் ஸ்தாபிக்கப்படவுள்ளது. (ம-7,10)

## அலரி மாளிகைக்குள் அத்துமீறி நுழைந்தவர்கள்

### கைதாகி பிணையில் விடுதலை

அலரி மாளிகைக்குள் அத்துமீறி பிரவேசித்த குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட இரண்டு பேர் பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

சந்தேகநபர்கள் கொழும்பு கோட்டை நீதவான் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்ட போதே, இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

அவர்கள் அண்மையில் கொள்ளுப்பிட்டி பகுதியில் உள்ள இரவு நேர விடுதிக்கு சென்று தாம் தங்கியிருந்த முஹன் திரம் வீதியில் உள்ள அறைக்கு திரும்பியுள்ளனர்.

இதற்காக கூகுள் மெப் சேவையினை பயன்படுத்தியிருந்த நிலையில், அவர்கள் பயணிக்க வேண்டிய வழி அலரி மாளிகையுடன் நிறைவடைந்துள்ளது.

அத்துடன், அலரி மாளிகையின் பின்புற வளாகத்தில் அவர்கள் பயணிக்க வேண்டும் எனவும் கூகுள் மெப் சேவையில் வழிகாட்டப்பட்டுள்ளது.

இதனையடுத்து, அவர்கள் அலரிமாளிகையின் மதிலில் ஏறி, அலரி மாளிகைக்குள், பிரவேசித்துள்ளதாக விசாரணையில் தெரியவந்துள்ளது. (ம-7,10)

## வாழைச்சேனையில் ஐஸ் போதைப்பொருளுடன் 36 வயதுடைய பெண் கைது

வாழைச்சேனை பொலிஸ் பிரிவிலுள்ள பிறைந்துறைச்சேனை பகுதியில் போதைப்பொருள் வியாபாரத்தில் ஈடுபட்டுக் கொண்டிருந்த பிரபல பெண் வியாபாரிஒருவரை அதிரடிப்படையினர் கைது செய்துள்ளனர்.

குறித்த சந்தேக நபரை நேற்று முன்தினம் இரவு கைது செய்துள்ளனர்.

இதன்போது 340 மில்லிக்கிராம் நீல நிறம் கொண்ட புதிய ஐஸ் போதைப்பொருள் உட்பட 4 கிராம் 470 மில்லிக்கிராம் ஐஸ் போதைப்பொருள், 8 ஆயிரத்து 750 ரூபா பணம் என்பவற்றை மீட்டுள்ளதாக வாழைச்சேனை பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

வாழைச்சேனை கடதாசி ஆலை முகாம் விசேட அதிரடிப்படைக்கு கிடைத்த தகவல் ஒன்றினையடுத்து. அம்பாறை மட்டக்களப்பு உதவிப் பொலிஸ் பணிப்பாளர் ஆலோசனைக்கமைய பொறுப்பதிகாரி கே.ஜி.லக்மால் தலைமையிலான குழுவினர் வாழைச்சேனை பிறந்துறைச்சேனை பகுதியிலுள்ள குறித்த வீட்டை முற்றுகையிட்டுள்ளனர்.

இதில் கைது செய்யப்பட்ட 36 வயதுடைய பெண்ணை விசேட அதிரடிப்படையினர் தம்மிடம் ஒப்படைத்துள்ளதாகவும், இவரது கணவர் ஏற்கனவே போதைப்பொருள் வியாபாரத்தில் ஈடுபட்ட நிலையில் கைது செய்து விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார் எனவும் இவரை நீதிமன்றில் முன்னிலைப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ம-7,10)

### பால் புரையேறியதில்

## 5 நாட்களேயான குழந்தை மரணம்

(கொழும்பு)

பிறந்து 5 நாட்களேயான குழந்தை ஒன்று பால் புரையேறி உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

பலாங்கொடை பிரதே [illegible]

இந்நிலையில் குழந்தையின் சடலம் பலாங்கொடை ஆதார வைத்திய சாலையில் வைக்கப்பட்டுள்ளது. மேலும் சம்பவம் தொடர்பிலான விசாரணைகள் இடம்பெற்று வருகின்றதாக கூறப்படுகிறது. (ம-7,10)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலகத் தாய்மொழிகள் தினம் பெப்ரவரி 21 ஆம் திகதி

கலாநிதி க.தவலிங்கம்
ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்.
தவிசாளர்- எல்லை நிர்ணய ஆணைக்குழு.

15



### வட்டெழுத்து

வட்டெழுத்து என்பது கி.பி மூன்றாம் நூற்றாண்டிலிருந்து கி.பி பத்தாம் நூற்றாண்டு வரை தமிழை எழுத பயன்படுத்தப்பட்டு வந்த ஓர் எழுத்துமுறையாகும். வளைந்த கோடுகளேயே அதிகமாகக் கொண்டிருந்ததால் வட்டெழுத்து என்று பெயர் பெற்றது. வட்டெழுத்தை மலையாள மொழியினை எழுதவும் பயன்படுத்தினர்.

வட்டெழுத்துக்கள் பிராமி எழுத்து முறையில் இருந்துதோன்றியதாக கருதப்படுகிறது. பிராமி எழுத்துக்களை ஓலைச்சுவடிகளில் எழுதுவதற்கிணங்க அதைமாற்றியதால் வட்டெழுத்து தோன்றியது எனப் பொதுவாக கருதப்படுகின்றது. பிராமி எழுத்துக்கள் கோடுகளாக இருப்பதால் (கோடுகளை ஓலைச் சுவடியில் எழுதினால் அவை கிழிந்துவிடும்) ஓலைச் சுவடியில் எழுதும் பொருட்டு அவற்றை வட்ட வடிவில் மாற்றி எழுதப்பட்டதால் வட்டெழுத்து உருவானதாகக் கருதலாம்.

ஆனால் சிலர் வட்டெழுத்தே தமிழரின் பழங்கால எழுத்துமுறையென்றும் அதிலிருந்தே தமிழ், பிராமி எழுத்துக்கள் தோன்றியன என்றும் வாதிடுகின்றனர். மு.வரதராசனார் தன்னுடைய தமிழ் இலக்கிய வரலாறு என்னும் நூலில் வட்டெழுத்தே தமிழரின் பழங்கால எழுத்து முறை என்றும் வடபிராமி தென்பிராமியாக திரிபுற்றது. வட்டெழுத்தை ஒட்டி வளர்ந்த வரைச்சியே காரணம் என்றும் கூறியுள்ளார். ஆனால் இந்த வாதம் பலரால் ஒப்புக்கொள்ளப்படவில்லை. கி.பி 8 ஆம் நூற்றாண்டுகளில் வட்டெழுத்து கிரந்த எழுத்துக்களுடன் மணிப்பிரவாளத்தை எழுதபயன்படுத்தப்பட்டது.

### வட்டெழுத்துபயன்பாடு

இவ்வெழுத்துமுறை பல்லவர்கள் காலத்தில் தொண்டை மண்டல நடுகற்களில் (நடுகற்கள்என்பது ஊரைக் காக்கவோ நாட்டைக்காக்கவோ உயிரிழந்த வீரர்களுக்கு எடுக்கப்பெறும் நினைவுக் கற்களாகும். இது சங்ககாலம் தொட்டே வழக்கிலுள்ளது) பெருமளவில் காணப்படுகிறது. இதனால் பல்லவ காலத்தில் இவ்வெழுத்துக்கள் மக்கள் வழக்காக இருந்தமையை அறியமுடிகிறது.

கி.பி 7 ஆம் நூற்றாண்டில் ஆட்சிசெய்த முற்காலப்பாண்டியர்கள் தங்களது அரசு ஆணைகளையும் வட்டெழுத்திலேயே பொறித்துள்ளனர் என்பதற்கு வேள்விக்குடி செப்பேடுகள் போன்ற செப்பேடுகளே சான்றாகும். இதன் மூலம் பாண்டிய நாட்டில் இவை அரசு வரி வடிவமாக இருந்ததை அறியலாம்.

கற்களில் மட்டுமின்றி பானை ஓடுகளிலும் இவை காணப்பெறுகின்றன. கோவைக்கு அருகே நொய்யல் ஆற்றங்கரையில் அமைந்துள்ள போளுவாம்பட்டியிலும் திருவண்ணாமலை மாவட்டம் ஆண்டிப்பட்டியிலும் மேற்கொண்ட அகழாய்வுகளில் கிடைத்த பானை ஓடுகளில் வட்டெழுத்துக்கள் காணப்படுகின்றன. இதன் அடிப்படையில் தமிழகம் முழுவதும் கி.பி. 4-5 ஆம் நூற்றாண்டு வாக்கிலேயே வட்டெழுத்து வழக்கத்திற்கு வந்துவிட்டதை உணரலாம்.

### வட்டெழுத்து வழக்கொழிந்தமை

இவ்வட்டெழுத்துக்கள் கி.பி. 10 ஆம் நூற்றாண்டுவரை பாண்டிய நாட்டில்வழக்கில்இருந்துள்ளன. இதைப் பயன்படுத்துவதிலும் படித்துணர்ந்து கொள்வதிலும் ஏற்பட்ட இடையூறுகள் காரணமாக இவ்வரி வடிவம் காலப்போக்கில் வழக்கிலிருந்து மறைந்தது. சமகாலத்தில் வாழ்ந்த மக்களாலேயே இவ்வெழுத்துக்களைப் படிக்க இயலாத நிலை இருந்துள்ளது.

இதை 14 ஆம் நூற்றாண்டு கல்வெட்டு ஒன்றில் "புரியாதவட்டம்" என்ற குறிப்பினால் அறியலாம் இருப்பினும் வட்டெழுத்து மக்கள் வழக்காகக் குறிப்பாக நடுகற்களில் கி.பி. 10 ஆம் நூற்றாண்டுவரை பயன்படுத்தப்பட்டது. தமிழகத்தில் கி.பி. 13ஆம்நூற்றாண்டில் வட்டெழுத்து தனது செல்வாக்கை முற்றிலும் இழந்தது. இருப்பினும் கேரளத்தில் தொடர்ந்து இவ்வட்டெழுத்துக்கள் பயன்படுத்தப்பட்டு வந்தன. கேரளாவில் வடமொழிச்சொற்களை அதிகமாகப் பயன்படுத்தியதன் காரணமாக வட்டெழுத்துடன் கிரந்தத்தின் பயன்பாடும் அதிகரித்தது. பின்னர் இவ்விரு எழுத்துக்களும் இணைந்து மலையாளம் என்ற புதிய வரி வடிவம் உருவானது.

### தமிழி மற்றும் வட்டெழுத்து கற்றல்

ஜினவாணி (tamiljinavani.appspot.com) செயலியானது நவீனகாலத்து தமிழ் எழுத்துக்களை தமிழ்-பிராமியிலும் வட்டெழுத்திலும் மாற்றும் திறன் கொண்டது. இதைத்தவிர்த்து, இதை தமிழ்-பிராமி மற்றும் வட்டெழுத்து எழுத்துக்களை கற்று பயிற்சி செய்யும் கருவியாகவும் பயன்படுத்தலாம். திருக்குறள் மற்றும் தொல்காப்பியத்தையும் கூட இதனூடாக இப்பழமையான எழுத்துக்களில் கண்டு களிக்கலாம்.

### மணிப்பிரவாள நடை

மணிப்பிரவாள நடை என்பது தமிழோடு வடமொழியும் விரவி நடக்கும் தமிழ் உரைநடை. இது தமிழோடு 13 ஆம் நூற்றாண்டில் இணைந்தது. இரத்தினம்-பவளம் என்ற நேரடிப்பொருளுடைய மணிப்பிரவாளம் எனும் சொல், தென்னிந்தியாவில் வடமொழியும், திராவிட மொழியொன்றும் கலந்து எழுதப்பட்ட ஒரு இலக்கிய நடையைக் குறிக்கும். மணியும், பவளமும் சேர்த்து உருவாக்கப்பட்ட மாலை போல இரண்டுமொழிகள் கலந்து உருவான இலக்கியநடை என்பது இதன் பொருளாகும்.

### மணிப்பிரவாளத்தின் தோற்றத்தை குறித்து மு.வரதராசரின் கருத்து

நாட்டில் இருமொழியையும் கற்றுத் தேர்ந்த புலவர் பரம்பரையுடன், வடமொழியை மட்டும் கற்ற புலவர்களும் தமிழ் மட்டுமே கற்ற புலவர்களும் வாழ்ந்து வந்தனர். அந்தநிலையில் தமிழறிவு ஒரு புறமும் வடமொழி அறிவு மற்றொரு புறமும் தனித்து இருப்பதை அறிந்த அறிஞர்கள் சிலர் ஒரு புது முயற்சியில் ஈடுபட்டார்கள். சமஸ்கிருத சொற்களையும் தமிழ் சொற்களையும் கலந்த ஒரு மொழி நடையைப் படைத்து மணிப்பிரவாளம் என பெயரிட்டு எழுதத்தொடங்கினார்கள். அதன் வாயிலாக வடமொழிக்கும் தமிழுக்கும் நெருங்கிய உறவு ஏற்படும் என்றும் வடமொழிப் புலவர்களும் தமிழ்ப்புலவர்களும் ஒன்றுபட முடியும் எனவும் நம்பினார்கள்.

மணிப்பிர வாளத்தை வளர்த்தவர்களின் நோக்கம் நல்ல நோக்கமே. தமிழ்நாட்டில் வீணான பிளவு வளர்வதை விரும்பாமல்அறிவு லகத்தில் ஒரு நல்ல ஒற்றுமை ஏற்படுத்துவதற்கு அது உதவியாகும் என நம்பினர். ஆனால் ஒருநாட்டு மக்களின் வாழ்விலும் சிந்தனையிலும் வழிவழியாக ஊறி வளர்ந்துவிட்ட மொழியின் தன்மையை படித்தவர்கள் சிலர் சேர்ந்து முயற்சி செய்து மாற்றிவிட முடியாது என்பதை அவர்கள் உணரவில்லை. நல்லநோக்கம் கொண்டதே ஆயினும், மொழி இயல்பக்கு மாறானது ஆகையால், அவர்களின் நோக்கம் தோல்வியைக் கண்டது.

### குயிலெழுத்து

சங்ககாலக் குயிலெழுத்து நடுகல்லில் (நடுகல் இறந்தவர்களின் நினைவாக எடுக்கப்படும் நினைவுக்கல்ஆகும்) செய்தி எழுதப் பயன்படுத்தப்பட்டது. கல்லில் எழுதப்பட்ட எழுத்தைக் குயிலெழுத்து என்றனர்.

முன்னர் கூறியதுபோல் கி.பி. மூன்றாம் நூற்றாண்டு அளவில் தமிழி எழுத்துவடிவங்களில் உருமாற்றங்கள் நிகழ்ந்துள்ளன என்றும் அம்மாற்றங்கள் இரண்டு பிரிவுகளைத் தோற்றுவிக்கும் வகையில் அமைந்துள்ளன என்றும் கருதப்படுகிறது. ஒன்று தமிழ் என்று அழைக்கப்படும் எழுத்துக்ளின் தொடக்கமாக அமைகின்றது. மற்றொன்று வட்டெழுத்து என்று அழைக்கப்படும் எழுத்துகளின் தொடக்கமாக அமைகின்றது. அதாவது தமிழகத்தில் குறிப்பிட்ட சில பகுதிகளில் தமிழ் எழுத்து எழுதப் பெற்று வந்துள்ளது. வேறு சில பகுதிகளில் வட்டெழுத்து எழுதப் பெற்று வந்துள்ளது.

### கோலெழுத்து

கோலெழுத்து என்பது தென் இந்தியாவில் காணப்பட்ட பண்டைய எழுத்து முறையாகும். இது தமிழ், மலையாளம் ஆகிய மொழிகளில் பாவிக்கப்பட்டது. இது மலையாளத்தில் மிகச்சமீப காலத்திலும் அதாவது கிட்டத்தட்ட கி. பி. 17 ஆம் நூற்றாண்டு வரையிலும் பயன்பாட்டில் இருந்துள்ளது. தற்போதும் இதன் குறிப்பிடத்தக்க பாவனை அங்குள்ளது.

வட்டெழுத்திலிருந்துகோலெழுத்து உருவாகியது. கிரந்த எழுத்து கலக்காத வட்டெழுத்தின் ஒரு வகைதான் கோலெழுத்து. இவற்றுக்கிடையே பாரிய வேறுபாடு இல்லை. ஆயினும் பிரதேசத்திற்குப் பிரதேசம் இதில் வேறுபாடுகள் காணப்பட்டன. இது வட்டெழுத்துக் குடும்ப எழுத்து முறைக்கு உரியதாகும். கோலால் எழுதப்படும் எழுத்து கோலெழுத்து என விளக்கப்படுகிறது. இன்னுமொரு கருத்து, "கோடுஎழுத்துக்கள்" கொண்டவை கோலெழுத்து என விளக்குகிறது.

### தமிழியிலிருந்து வட்டெழுத்துகளும் தமிழ் எழுத்துகளும் வளர்ந்த வரலாறு

இதுவரை தமிழ் வரிவடிவ வளர்ச்சியைத் தமிழி, தமிழ், வட்டெழுத்து ஆகிய எழுத்துகள் வழி அறிந்தோம். தமிழ் வரிவடிவம் நூற்றாண்டு தோறும் வளர்ச்சி பெற்று வந்துள்ளதை அட்டவணை 1அ மற்றும் 1ஆ காட்டுகின்றன. (தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஓமந்தையில்...

தைப் பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த பகுதியில் சடலம் ஒன்று காணப்படுகின்றமை தொடர்பாக அப் பகுதிக்குச் சென்றவர்களால் ஓமந்தை பொலிஸாருக்கு தகவல் தெரியப்படுத் தப்பட்டது.

இதனையடுத்து, சம்பவ இடத் திற்குச் சென்ற பொலிஸார் சடலத்தை மீட்டுள்ளதுடன் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

சடலம் அழுகிய நிலையில் உள்ள மையினால் சில தினங்களிற்கு முன்ன ராகவே இறந்திருக்கலாம் என பொலி ஸார் தெரிவித்தனர்.

சம்பவம் தொடர்பாக விசாரணை களை முன்னெடுத்துவரும் ஓமந்தை பொலிஸார் சடலத்தை உடற்கூற்று பரிசோதனைக்கு உட்படுத்துவதற் கான நடவடிக்கைகளை முன்னெ டுத்து வருகின்றனர். (ம-7,10,250)

## 4 மாத ஆண்...

னின்றி உயிரிழந்துள்ளது.

வரணியைச் சேர்ந்த ரவிநாதன் ஆரத் என்ற நான்கு மாத குழந்தையே உயிரி ழந்ததாகும்.

இரட்டைக் குழந்தைகளாக ஆண் குழந்தைகள் பிறந்த நிலையில் அவர் களுக்கு சளி ஏற்பட்டதன் காரணமாக கடந்த 27ஆம் திகதி இரண்டு குழந்தை களும் பருத்தித்துறை ஆதார வைத் தியசாலையில் சிகிச்சைக்காக அனு மதிக்கப்பட்டு பின்னர் நேற்று முன் தினம் திங்கட்கிழமை காலை யாழ். போதனா வைத்தியசாலைக்கு மாற்றப் பட்ட நிலையில் ஒரு குழந்தை நேற்று செவ்வாய்க்கிழமை சிகிச்சை பல னின்றி உயிரிழந்துள்ளது.

இம் மரணம் தொடர்பில் யாழ். போதனா வைத்தியசாலை திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேமகுமார் விசாரணைகளை மேற் கொண்டு உடற்கூற்று பரிசோதனைக்கு அறிவுறுத்தினார். (ம-7,10,60)

## நாவற்குழியில்...

அடையாளம் காணப்பட்டிருந்தது.

இது தொடர்பாக சாவகச்சேரிப் பொலிஸாருக்கு தகவல் வழங்கப்பட்டு கைக்குண்டை மீட்பதற்கான நடவடிக் கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின் றன. (ம-7,10,30)

## டிப்பர் மோதியதில்...

பிரிவுக்குட்பட்ட அடம்பன் நாற்சந்திப் பகுதியில் நேற்று முன்தினம் திங்கட் கிழமை மாலை இவ்விபத்து இடம்பெற் றுள்ளது.

இதில் மன்னார் மறைமாவட்டத் தைச் சேர்ந்த சலேசியன் சபையைச் சேர்ந்த அருட்தந்தை மரிசால் டிலான் (வயது-34) என்பவரே உயிரிழந்தவரா வார்.

குறித்த விபத்து தொடர்பாக மேலும் தெரியவருகையில்,

வடக்குக் கிழக்கு தமிழ் மறைமாவட்ட குருக்களுக்கான தவக்கால தியானம் மன்னார் மடு தேவாலயத்தில் நடை பெற்றது.

இதில் கலந்துகொண்டு விட்டு நேற்று முன்தினம் மாலை திரும்புகையில் இவ் விபத்து இடம்பெற்றுள்ளதாகத் தெரிய வருகிறது.

மன்னார் - அடம்பன் பகுதியூடாக அருட்தந்தை டிலான் மோட்டார் சைக் கிளில் பயணித்தவேளை எதிரே வந்த டிப்பர் வாகனத்துடன் மோதுண்டதில் விபத்து சம்பவித்துள்ளது.

இதன் போது படுகாயமடைந்த அவர் சிகிச்சைக்காக மன்னார் பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப் பட்டார்.

இந்நிலையில் மேலதிக சிகிச்சை வழங்கப்பட்டு வந்த நிலையில் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

மேலும் விபத்து தொடர்பான விசா ரணைகளை அடம்பன் பொலிஸார் மேற் கொண்டு வருகின்றனர். (ம-7,10,285)

## வடக்கில் படை...

கலந்துரையாடினார். பாதுகாப்பு அமைச் சில் இந்த சந்திப்பு நடைபெற்றது.

வடக்கில் பாதுகாப்புப் படையினர் வசமுள்ள பொதுமக்களின் காணி களை, மீள்குடியேற்றம் மற்றும் விவ சாய நடவடிக்கைகளுக்கு விடுவிப்பது தொடர்பில் ஆளுநரினால் பாதுகாப்புச் செயலாளரிடம் எடுத்துக்கூறப்பட்ட தற்கு அமைவாக, காணிகளை விடு விப்பது தொடர்பில் ஆராய்ந்து விரை வில் சம்பந்தப்பட்ட தரப்பினருக்கு தாம் பரிந்துரைகளை அனுப்புவதாக பாது காப்புச் செயலாளர் ஜெனரல் கமல் குணரத்ன, வடக்கு மாகாண ஆளுநரிடம் இதன்போது தெரிவித்தார்.

## நல்லை ஆதீன...

யாழ்ப்பாணத்திற்கான இந்திய துணைத் தூதுவர் சாய் முரளி, நல்லை ஆதீன குரு முதல்வர் சோமசுந்தர பரமாச்சாரியார் சுவாமிகளை சந்தித்து ஆசி பெற்றார்.

யாழ்ப்பாணம் நல்லூரில் அமைந் துள்ள நல்லை ஆதீனத்தில் அண்மை யில் குறித்த சந்திப்பு நடைபெற்றது.

இதன்போது புதிய இந்திய துணைத் தூதரை வாழ்த்திய நல்லை ஆதீன குரு முதல்வர் பொன்னாடை போர்த்திக் கௌரவித்தார்.

குறித்த சந்திப்பின்போது அகில இலங்கை இந்து மாமன்றத்தின் உப தலைவர் ஆறு.திருமுருகன் உள் ளிட்ட இந்திய துணைத்தூதரக அதி காரிகள் கலந்து கொண்டனர்.

யாழ்ப்பாணத்திற்கான புதிய இந்திய துணைத் தூதுவராக சாய் முரளி அண் மையில் கடமைகளை பொறுப்பேற்று கொண்டார் என்பது குறிப்பிடத்தக்கது. (ம-7,10,33)

## உணவுப்...

என.

அத்துடன், சோற்றுப்பொதி ஒன்று 25 ரூபா யினாலும் கொத்து மற்றும் பிரைட் ரைஸ் ஆகியன 50 ரூபாயினாலும் குறைக்கப்பட வுள்ளதாக, அகில இலங்கை சிற் றுண்டிச்சாலை மற்றும் உணவக உரிமையாளர்கள் சங்கம் தெரிவித் துள்ளது. (ம-7,10)

## காங்...

நேற்று செவ் வாய்க்கிழமை ஏற்பாடு செய்த "இந்திய கதை : சீர்திருத்தம் ; செயல்திறன் ; மாற்றம்" என்ற தலைப்பிலான கேள்வி பதில் நிகழ்ச்சியிலேயே இந்திய உயர்ஸ் தானிகர் சந்தோஷ் ஜா கலந்து கொண்டு கேட் கப்பட்ட கேள்வி களுக்கு பதில ளிக்கையிலேயே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இலங்கையின் தேவைகளுக் கேற்ப நாம் உதவி களை வழங்கத் தயார் எனவும் எட்கா ஒப்பந்தம் இந்தியாவை விட இலங்கைக்கே அதிக பயன் தரு மெனவும் இந்திய உயர்ஸ்தானிகர் சந்தோஷ் ஜா தெரிவித்தார்.

மேலும் இந் திய மற்றும் இல ங்கை மீனவர் களுக்கு இடை யிலான பிரச்சினையென்பது பல தசாப் தங்களாக காணப்படும் பிரச்சினை யாகும். இது இரு நாடுகளுக்கும் இடை யில் தொடர்ந்து இடம்பெறும் கலந்து ரையாடலின் மூலம் தீர்வைப் பெற் றுக்கொள்ள முடியும்.

இலங்கையில் வாழ்வாதார பிரச் சினைகளை குறைக்க முதலில் நட வடிக்கை எடுக்க வேண்டும். போக்கு வரத்தில் பாரிய மாற்றங்களை செய்வது கடினமானது. என்றாலும் காங்கேசன் துறை முதல் மாத்தறை வரையிலான ரயில் போக்குவரத்துக்கு இந்தியாவின் பங்களிப்பு முக்கியமானதாகக் காணப் பட்டது.

இலங்கையின் காங்கேசன்துறைக் கும் இந்தியாவின் நாகப்பட்டினத்திற் கும் இடையிலான பயணிகள் கப்பல் சேவையை மீண்டும் ஆரம்பிக்க நட வடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. இம் மாத இறுதிக்குள் இந்த கப்பல் சேவை ஆரம்பிக்கப் படும். அத்துடன் தலைமன்னாருக்கும் இரா மேஸ்வரத்திற்கும் இடையிலான கப் பல் சேவையை ஆரம்பிப்பது தொடர்பில் திட்டமிடப்பட்டுள்ளது என்றார். (ம-7,10)


தன நிதானய
திகதி - 2024.03.05
சீட்டிழுப்பு இலக்கம் - 1440
R 03 13 36 59 R
71306

மஹஜன சம்பத
திகதி 2024/03/05
சீட்டிழுப்பு இலக்கம் 5410
H 5 3 3 8 0 9

மெகா பவர்
திகதி 05/03/2024
சீட்டிழுப்பு இலக்கம் 1758
M 18 03 31 36 42
06432

லக்கி 7 VIP
திகதி 2024.03.05
சீட்டிழுப்பு இலக்கம் 0236
Y 6 4 4 9 3 5 Y

கொவிசெத
சீட்டிழுப்பு இலக்கம் 3652
சீட்டிழுப்பு திகதி 05.03.2024
C 01 45 54 68
C 01113

HANDAHANA
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2024.03.05
சீட்டிழுப்பு இலக்கம் 0719
சிம்மம் 05 18 24 47 சிம்மம்
59186 07

உத்தியோகபூர்வ முடிவுகள்
05.03.2024 வெற்றி வாரம் 118 வர்ணம் சிவப்பு
E 4 8 3 8 1 5
30,479,264.00
DLB தொலைபேசி: 011-2 333 546-47 Web : www.dlb.lk

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 2384 வர்ணம் வெளிர் நீலம்
சீட்டிழுப்பு திகதி 05.03.2024 தினம் செவ்வாய்
02 32 36 40 Z
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 76,411,755.20

சனிதா
திகதி 2024.03.05 வெற்றி வாரம் 4545 வர்ணம் பச்சை
06 22 33 39 H
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 51,956,913.20

சசிரி
வெற்றி வாரம் 450
சீட்டிழுப்பு திகதி 2024.03.05
14 35 39
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. 3,074,120/-

ராசி
சீட்டிழுப்பு வாரம் 4096 வர்ணம் சிவப்பு
சீட்டிழுப்பு திகதி 2024.03.05 தினம் செவ்வாய்க்கிழமை
17 18 27 58
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 9,567,891.60

ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம்
Y 21 43 51 66 70
1560
05.03.2024 செவ்வாய்
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 509,990,226.20
DLB தொலைபேசி: 011-2 333 546-47

அத கோடிபதி ADA KOTIPATHI
செவ்வாய்க்கிழமை
வெற்றி வாரம் : 2210
சீட்டிழுப்பு திகதி : 2024.03.05
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 96,422,428/-
02 10 50 69 E


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

வங்கியில் அடகு வைத்த நகைகளை
மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத்தருகின்றோம்

## ஆகாஸ் நகை மாடம்

யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை வல்வெட்டித்துறை, உடுப்பிட்டி, காரைநகர், வவுனியா, மன்னார் ஆகிய பகுதிகளில்

வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தைத் தந்து வாங்கப்படும். (19361)

**076 825 7716** (ஆகாஸ்)



## கண்ணீர் அஞ்சலி



எமது நிறுவனங்களின் பிரபல புவியியல் பாட ஆசிரியர்
திரு. P.S.**குமரன்** அவர்களின் அன்புத் தந்தையார்

### இராசையா பாலச்சந்திரன்

அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு
ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவித்துக் கொள்கின்றோம்.
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

**இயக்குநர், ஆசிரியர்கள், பணியாளர்கள்**
**பொருளியற்கல்லூரி - யாழ்ப்பாணம், சுன்னாகம்**
**பாரதி - சித்தன்கேணி**

(C-8477)



## விசா ஆலோசனை மற்றும் வங்கி மீதி வசதிகள்

சகல நாடுகளுக்குமான விசா ஆலோசனை மற்றும் வங்கி மீதி (Show money) வசதிகள்

தொடர்புகளுக்கு : (C-8474)

**074 17 37 684**



## மலிவு விற்பனை

ஏசியன் தளபாட நிலையம் வழங்கும்
மாபெரும் தளபாட மலிவு விற்பனை
மார்ச் - 6,7,8,9,10
இடம் - யாழ். முற்றவெளி மைதானம் (19373)

**021 222 7892 | 076 821 9416**



## மலிவு விற்பனை

கடந்த 40 வருடங்களாக யாழ்.மக்களின் நன் மதிப்பைப் பெற்ற **SILVER SHIELD SOCKS**
பாடசாலை மாணவர்களுக்கும் அரச உத்தியோகத்தர்களுக்கும் ஏற்ற நைலோன்/ கொட்டன் காலுறைகள் (SOCKS) மலிவு விலையில்

**மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளவும்**

உலகெங்குமுள்ள உறவுகளிடமிருந்து ஒருசில நிமிடங்களில் உங்கள் பணத்தை
WESTERN UNION MONEY TRANSFER | Ria | MoneyGram. money transfer
ஊடாக பெற்றுக்கொள்ளவும். (C-8464)

**ஸ்ரீ முருகன் தொலைத்தொடர்பகம்**
**303, K.K.S வீதி, யாழ்ப்பாணம்.**
**021 222 5392, 076 315 6470**



## பிரபல ஜோதிடர் குமாரசாமி யாழ். விஜயம்

திருமணத்தடை, மணவாழ்க்கையில் நிம்மதி இல்லையா? காதல், நோய், கல்வியில் மேன்மை இன்மை, தொழில் மேன்மை இன்மை அனைத்து விதமான பிரச்சினைகளுக்கும் முன் அனுமதி பெற்று வரவும்.

**077 877 8470**

இடம் : தெறேசா இன் (THERESA INN)
72, றக்கா வீதி, சுண்டுக்குளி (19312)

கீரிமலையிலும் சந்திக்கலாம்



## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் உரும்பிராய் சந்தியிலிருந்து கோப்பாய் செல்லும் பிரதான வீதி முகப்புடன் நான்கு - 4 பரப்பு நிலப்பரப்பு காணி விற்பனைக்குண்டு.

**சகல ஆவணங்களுடன் சிவப்புமண், நன்னீர் ஊற்று, கிருஷ்ணன் கோவில் அருகாமை, தரகர் தேவையில்லை.**

தொடர்பு :-

**077 638 5683,**
**075 638 5684** (19371)



## வேலை வாய்ப்பு

- விற்பனைப் பிரதிநிதி (Sales Rep)
  - தகைமை - க.பொ.த உயர்தரம்
  - முன் அனுபவம் விரும்பத்தக்கது.
  - ஓட்டுனர் உரிமம் (Driving License)
- பட்டா றைவர் (Batta Driver)
  - சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.
  - யாழ். நகரில் இருந்து 7Km தொலைவிற்குள் இருத்தல் வேண்டும்.

(19359)

**077 326 9589, 077 711 0164**



## மற்றுமொரு புதிய பஸ் சேவை ஆரம்பித்துள்ளனர்

**Village Hotel Jaffna Express**

அச்சுவேலி → புன்னாலைக்கட்டுவன் →
உரும்பிராய் → திருநெல்வேலி →
யாழ்ப்பாணம் → கொழும்பு

கட்டணம் - 2700/=

தொடர்புகளுக்கு (19118)

**077 544 8503**



## வலம்புரி விளம்பரத் தொடர்புகளுக்கு

**076 636 3378 | 076 097 3127**



## ஆசிரியர் தேவை

K.T.C ஆஸ்பத்திரி வீதி கோண்டாவிலில் இயங்கும் எமது தனியார் கல்வி நிறுவனத்திற்கு தரம் 9,10,11 விஞ்ஞானம் கற்பிக்க ஆசிரியர் தேவை.

நிர்வாகி
ஞான.திருக்கேதீஸ்வரன்
076 176 8821 (C-8472)


## மரண அறிவித்தல்



### மார்க்கண்டு வேலாயுதம்பிள்ளை

**( வேம்படி மகளிர் கல்லூரி ஓய்வுபெற்ற Peon )**

பன்னாலையைப் பிறப்பிடமாகவும் வட்டுக்கோட்டையை வசிப்பிடமாகவும் கொண்ட மார்க்கண்டு வேலாயுதம்பிள்ளை அவர்கள் கடந்த 03.03.2024 (ஞாயிற்றுக்கிழமை) அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற மார்க்கண்டு மற்றும் ஆச்சிமுத்து தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்ற வைத்திலிங்கம் மற்றும் சின்னம்மா தம்பதியரின் அன்பு மருமகனும் காலஞ்சென்ற விஜயலட்சுமி அவர்களின் அன்புக் கணவரும் உதயகுமார், நந்தினி, சசிக்குமார், விஷ்ணுகாந்தன் ஆகியோரின் பாசமிகு அன்புத் தந்தையும் செல்வராசா (சுகிர்), கார்த்திகா, கீர்த்திகா ஆகியோரின் அன்பு மாமனாரும் கஜானன், தேனுசா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நாளை (07.03.2024) வியாழக்கிழமை பிற்பகல் 1.00 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக வழுக்கையாறு இந்துமயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

வட்டு தெற்கு, 077 282 6090
வட்டுக்கோட்டை. 076 971 8318 (19369)

தகவல்:
குடும்பத்தினர்


## பணிப்பெண் தேவை

உடனடியாக பணிப்பெண் தேவை. தகுந்த சன்மானம் வழங்கப்படும்.
இடம் :
கச்சாய் சந்திக்கு அருகாமை (C-8475)

**076 061 2378**



## விற்பனைக்கு

வெல்டிங் பிலாண்ட், ஜக்(15T), ஸ்கூட்ரைவர், குறடு, போக்கஸ் லைட் என்பன உடன் விற்பனைக்கு உண்டு. (C-8476)

**077 318 9474**



## பணியாளர் தேவை

உரும்பிராயில் அமைந்துள்ள சூப்பர் மாக்கட்டிற்கு கீழ்வரும் பணியாளர் தேவை.

**கூலியாள் - ஆண்** (19370)

இரவு நேரங்களில் பணிபுரிய கூடியவர்கள் தேவை. நேரில் வந்து தொடர்பு கொள்ளவும்.

Happy Super Market
**076 422 1761**



## சாரதி தேவை

வான், ஆட்டோ ஓடத்தெரிந்தவராகவும் அலுவலக வேலைகளுக்கு உதவுபவராகவும் இருக்க வேண்டும்.




சம்பளம்: 40'000/-



வயது: 21 முதல் 40 வரை
தொடர்புக்கு:-
**0777068777** (C-8474)



## கண்ணீர் அஞ்சலி



எமது ஆசான் பிரபல புவியியல் பாட ஆசிரியர்
திரு.P.S.**குமரன்** அவர்களின் அன்புத் தந்தையார்

### இராசையா பாலச்சந்திரன்

அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும்
அன்னாரின் குடும்பத்தினருக்கு
ஆழ்ந்த அனுதாபங்களைத்
தெரிவித்துக் கொள்கின்றோம்.
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

தோற்றம் : 17.08.1946
மறைவு : 03.03.2024

பிரிவுத் துயரில் பங்குகொள்ளும்
**புவியியல் மாணவர்கள்**

(C-8478)


இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்டெட் ஸ்தாபன[illegible] யாழ்ப்பாணம் [illegible] முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 06.03.2024 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org